




வாராந்த மின்னிதழ்

உண்மையின் முகம்

# கல்முனை NET

kalmunainet.com

e paper

தமிழ் மொழியினருக்கான தகவல் தளம்

பிலவ வருடம் ஆனி 19 [03.07.2021] இதழ் : 23







## இம்மாதம் பாடசாலைகள் மீள திறப்பு!

**நமது நிருபர்**

கொரோனா அச்சம் காரணமாக மூடப்பட்டுள்ள பாடசாலைகளை இந்த மாத இறுதிக்குள் மீளத்திறக்க எதிர்பார்ப்பதாக கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் நேற்றுமாலை அறிவித்துள்ளார். 02

# கிழக்கில் 15,000ஐக் கடந்தது தொற்றுகள்!

## கல்முனை பிராந்தியத்திற்கு தடுப்பூசி வழங்கப்படாதது ஏன்?

**(வேதசகா)**

கிழக்கு மாகாணத்தில் கொரோனா வைரஸ் தீநுண்மியின் கோரத்தாண்டவம் உச்சக்கட்டத்தை அடைந்திருக்கிறது.

அங்கு இதுவரை 274 பேர் பலியாகியுள்ளனர். தொற்றாளர்களின் எண்ணிக்கை 15ஆயிரத்தை தாண்டியிருக்கிறது. நேற்று (2) வரை 15399 பேருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது. 02

## மருதமுனை 3ஆம் பிரிவு நேற்றுமுதல் முடக்கம்!



**(வேதசகா)**

கல்முனைப் பிராந்தியத்தின் கல்முனை தெற்கு சுகாதாரப் பகுதிக்குட்பட்ட மருதமுனை 3ஆம் பிரிவு நேற்று (2) வெள்ளிக்கிழமை நண்பகல் முதல் தனிமைப்படுத்தலுக்காக முற்றாக முடக்கப்பட்டுள்ளதென கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் குண. சுகுணன் தெரிவித்தார்.

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி 02

## விரைவில் அமைச்சரவை மாற்றம்?

**நமது நிருபர்**

மிக விரைவில் அமைச்சரவையில் மாற்றம் ஏற்படுத்த உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. நாடாளுமன்ற உறுப்பினராக பஷில் ராஜபக்ஷ அடுத்த வாரம் பதவியேற்க உள்ளார்.

அதன் பின்னரே பெரும்பாலும் இந்த அமைச்சரவை மாற்றம் நிகழவுள்ளதாக கூறப்படுகிறது.

அதன்படி தற்போது அமைச்சர்களாக உள்ள சிலர் பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சர்களாக பதவிமாற்றம் செய்யப்பட உள்ளதாகவும் அந்த தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

## புலம்பெயர் மக்களுக்காக பிரதமர் புதிய கட்டுப்பாடு


ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2234/49 - 2021 ජූලි මස 02 වැනි සිකුරාදා - 2021.07.02
2234/49 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

**நமது நிருபர்**

இலங்கையில் புலம்பெயர்ந்து தங்கியுள்ள வெளிநாட்டவர்கள் தமது சொந்த நாடுகளுக்கு பணத்தை அனுப்புவதற்கு வரையறை விதிக்கப்பட்டுள்ளது.

அவர்களின் சொந்த நாட்டிற்கு புலம்பெயர் கொடுப்பனவின் கீழ் நிதிகளை 02

## திங்கள் முதல் புதிய மாற்றங்கள்

**நமது நிருபர்**

நாடளாவிய ரீதியில் நடைமுறைக்கு வரும் வகையில் எதிர்வரும் திங்கட்கிழமை (05) முதல் புதிய சுகாதார வழிகாட்டல்கள் உள்ளடங்கிய சுற்றறிக்கை ஒன்றை வெளியிடப்போவதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டின் 02

## வார இறுதியில் நாடு முழுவதும் அதிரடி நடவடிக்கை

**நமது நிருபர்**

தனிமைப்படுத்தப்பட்ட விதிகள் மற்றும் விதிமுறைகளை மீறும் தரப்பினர் மற்றும் நிகழ்வுகளை நடத்துவோரை கைது செய்ய வார இறுதியில் பொலிஸார் நாடு முழுவதும் சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 02

## கூகிளில் இணைத்துக் கொள்ளப்பட்ட யாழ். மாணவனின் நவீன கண்டுபிடிப்பு



**நமது நிருபர்**

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தரம் 10 இல் கல்வி கற்கும் நக்கீரன் மகிழினியன் என்ற 15 வயது மாணவன் வாட்ஸ்அப் மற்றும் வைபர் போன்ற செயலிகளுக்கு இணையான புதிய செயலி ஒன்றை கண்டுபிடித்துள்ளார்.

mSQUAD என்ற செயலி தொலைத் தொடர்பாடல் 02

## மேலும் ஒரு மில்லியன் சினோபார்ம் டோஸ்கள்!

**நமது நிருபர்**

மேலும் ஒரு மில்லியன் டோஸ் சினோபார்ம் தடுப்பூசிகள் இலங்கையை வந்தடைந்துள்ளன.

நேற்று (02) அதிகாலை 5.00 மணியளவில் UL 869 எனும் விமானம் மூலம் குறித்த தடுப்பூசிகள் வந்தடைந்ததாக, மருந்து உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.

## பக்தர்களின்றி கதிர்காம ஆடிவேல்விழா!

**நமது நிருபர்**

வரலாற்று சிறப்புமிக்க கதிர்காமம் கந்தன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல்விழா உற்சவம் பக்தர்களின் பங்குபற்றல் இன்றி இடம்பெறவுள்ளது. நேர்த்திக்கடன்களுக்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

கதிர்காமம் கந்தன் ஆலய வருடாந்த 02

## உகந்தமலை முருகனாலய ஆடிவேல்விழா 10இல் ஆரம்பம்!

### பக்தர்களுக்கு அனுமதி இல்லை: சிரமதானம், நேர்த்திக்கடன் தடை!

**நமது நிருபர்**

கிழக்கின் தென்கோடியிலுள்ள வரலாற்று சிறப்புமிக்க உகந்தைமலை ஸ்ரீ முருகன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல்விழா உற்சவம் எதிர்வரும் 10ஆம் திகதி கொடியேற்றதுடன் ஆரம்பமாகி 25ஆம் 02






முற்றாக முடக்கப்பட்ட மருதமுனை 03ஆம் பிரிவு

## பயங்கரவாத தடைச்சட்டம் மறுசீரமைக்க ஸ்ரீலங்கா தயார்!

**நமது நிருபர்**

ஸ்ரீலங்கா அரசாங்கம் ஐரோப்பிய ஒன்றியத்துடன் உரிய மற்றும் பன்முக உரையாடலுக்காக தொடர்ச்சியாக பொறுப்புடன் செயலாற்றும் என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

அத்துடன் பயங்கரவாத தடைச் சட்டத்தின் சில விதிகளை மீள ஆராய நடவடிக்கை எடுத்து வருவதாகவும் ஐரோப்பிய ஒன்றியத்திடம் அறிவித்துள்ளது.

மேலும் இருதரப்பு ஒத்துழைப்பின் சகல பிரிவு மீளாய்வு அடுத்த வருடம் முதல் காலாண்டில் ஒன்றிணைந்த ஆணைக் குழுவை கூட்டி கலந்துரையாட எதிர்பார்க்கப்படுகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜீ.எஸ்.பி கண்காணிப்பு சுழற்சி தொடர்பிலான பின்னணிக்காக விரிவான பதிலை அரசாங்கம் ஐரோப்பிய ஆணைக்குழுவிற்கு அளித்துள்ளது என, வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

## கிழக்கில் 15,000 கடந்த தொற்..

கிழக்கு மாகாணத்திற்கென வழங்கப்பட்ட 75 ஆயிரம் சைனோபாம் தடுப்பூசிகளில் 74 ஆயிரத்து 901 ஊசிகள் நேற்று (2) வெள்ளி வரை ஏற்றப்பட்டுள்ளதென கிழக்கு மாகாண சுகாதார திணைக்கள பணிப்பாளர் டாக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார்.

மட்டு.மாவட்டத்தில் 24995 பேருக்கும் அம்பாறை பிராந்தியத்தில் 24991 பேருக்கும் திருமலை மாவட்டத்தில் 24915 பேருக்கும் செலுத்தப்பட்டுள்ளன.

கல்முனைப் பிராந்தியத்திற்கு இன்னும் தடுப்பூசி செலுத்தும் பணி ஆரம்பிக்கப்படவில்லை. அதற்கான முன்னாயத்த வேலைகள் சகல சுகாதாரப் பிரிவுகளிலும் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதுதொடர்பில் கிழக்கு மாகாண சுகாதார திணைக்கள பணிப்பாளர் டாக்டர் ஏ.ஆர்.எம். தௌபீக்கிடம் கேட்டபோது இதுவரை மத்திய அமைச்சிலிருந்து உறுதியான தகவல் எதுவும் கிடைக்கப்பெறவில்லை என்று பதிலளித்தார்.

இதேவேளை பிராந்தியப் பணிப்பாளர் டாக்டர்குண.சுகுணன்தனதுபதிவில்அடுத்த வாரமளவில் தடுப்பூசிகள் செலுத்தப்படவிருக்கின்றன எனக்குறிப்பிட்டுள்ளார்.

எதுஎப்படியிருப்பினும் கல்முனைப் பிராந்தியத்திற்கு தடுப்பூசிகள் வழங்கப்பட வேண்டும் என சுகாதாரத் துறையினர் தொடக்கம் அரசியல்வாதிகள் வரை வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டும் இன்னமும் தடுப்பூசிகள் வழங்கப்படாதமை குறித்து மக்கள் மத்தியில் விசனம் தெரிவிக்கப்பட்டு வருகின்றது. கூடவே அச்சமும் நிலவுகிறது.

## மருதமுனை 3ஆம்...

பிரிவுக்குட்பட்ட மருதமுனை பிரதேசம் ஆபத்தான பிரதேசமாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றுக்கு இலக்காகி அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை அவசரப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த மருதமுனை பிரதேசத்தை சேர்ந்த மூவர் ஒரே நாளில் மரணமடைந்ததனால் 100 பேருக்கு எழுமாறாக எடுக்கப்பட்ட பீ.சி.ஆர். பரிசோதனையில் 17 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து, மருதமுனை மூன்றாம் பிரிவை எதிர்வரும் 14 நாட்களுக்கு முடக்க தீர்மானித்துள்ளதாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கு.சுகுணன் தெரிவித்தார்.

ஒரே நாளில் மூவர் மரணமடைந்ததை அடுத்து 200 பேருக்கு மருதமுனை பிரதேசத்தில் எடுக்கப்பட்ட அண்டிஜன் பரிசோதனையில் இருவர் மட்டுமே தொற்றாளராக அடையாளம் காணப்பட்டனர்.

இந்நிலையில் 100 பேருக்கு எழுமாறாக எடுக்கப்பட்ட பீ.சி.ஆர். பரிசோதனையில் 17 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டமையானது ஆபத்தான ஒன்றாகும். அதனாலயே மருதமுனை மூன்றாம் பிரிவை எதிர்வரும் 14 நாட்களுக்கு முடக்க கல்முனை மாநகர முதல்வர், கல்முனை பிரதேச செயலாளர், பொலிஸ், கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி உட்பட பலர் அடங்கிய குழுவினர் தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதன்படி மாலை 05 மணிமுதல் மருதமுனை பிரதேசத்தில் போக்குவரத்து தடை அமுலாகுவதுடன் மருந்தகத்தை தவிர ஏனைய சகல வர்த்தக நிலையங்களும் மூடப்பட வேண்டும். அத்துடன் மூடப்பட்டுள்ள பிரதேசத்தில் தொடர்ந்தும் பீ.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட உள்ளதுடன்மூடப்பட்டபிரதேசங்களைஅண்டியபிரதேசங்களுக்கும் அண்டிஜன் பரிசோதனை செய்யப்பட உள்ளது.

இன்று (3) சனிக்கிழமை அதற்கமைவாக மிவுள்ள மருதமுனை 1ஆம் பிரிவு 2ஆம் பிரிவு போன்ற பிரிவுகளில் 150பேருக்கு அன்ரிஜன் சோதனை நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது என்றும் டாக்டர் சுகுணன் தெரிவித்தார்.

இதேவேளை எதிர்வரும் பெருநாள் காலம் என்பதனால் பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளில் வழமையாக காட்டும் அசமந்த போக்கை இனியும் கடைபிடிக்காமல் தீவிரமாக சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறும் அவர் பொதுமக்களிடம் கேட்டு கொண்டார்.

## உகந்தமலை முரு...

திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவிருக்கிறது.

ஆனால் நாட்டின் கொவிட் நிலைமை காரணமாக பக்தர்கள் மற்றும் பாத யாத்திரீகர்களுக்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. நேர்த்திக்கடனும் செலுத்தமுடியாது.

ஆக ஆலய குருக்கள் நிருவாகசபையினர் உபயகாரர்கள் என 30 பேருக்கு மாத்திரம்; அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவர்களுக்கும் அன்ரிஜன் மற்றும் பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பின்னரே ஆலயத்துள் அனுமதிக்கப்படுவர்.

பொலிசார் இராணுவத்தினர் உள்ளிட்ட அனைவரையும் விசேட பாதுகாப்பு மற்றும் வீதிச்சோதனை கடமையில் ஈடுபடுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வழமைபோன்று ஆலயத்தில் இடம்பெறும் சிரமதான நடவடிக்கைகளில் கலந்து கொள்ளும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் சமூக அமைப்புக்கள் தொண்டு நிறுவனங்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் அப்பணியை கடற்படையினர் மற்றும் சிவில் பாதுகாப்பு படையினர் மேற்கொள்ளவுள்ளனர்.

ஆகவே பொதுமக்கள் எக்காரணத்தை கொண்டு உகந்தை முருகன் ஆலயத்திற்கு வருகை தருவதை தவிர்க்குமாறும் அவ்வாறு வருகை தருகின்றவர்கள் திருப்பி அனுப்பி வைக்கப்படுவர் எனவும் கூறப்பட்டுள்ளது.

## ஆசிரியர் பக்கத் தொடர்ச்சி...

### சீனாவின் கபட தந்திரம்

இலங்கையுடன் நெருக்கமான இராஜதந்திர உறவை பேணுவதாக சீனா காட்டிக் கொண்டாலும், அதன் நீண்டகாலத் திட்டமான பட்டுப்பாதைத் திட்டத்தை (Silk Route) நடைமுறைப்படுத்துவதில் உறுதியாகவே செயல்படுகிறது என்பது தெட்டதெளிவாகிறது.

பலவீனமான நாடுகளை நேசக்கரங்களால் அரவணைப்பதுபோல்பாசாங்குசெய்து,நாடுகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதுதான் சீனாவின் மறைமுக தந்திரம். இதற்குள் வசமாக மாட்டி இருப்பது இலங்கைதான்.

கொழும்பு துறைமுக நகரை உருவாக்கியதன் மூலம் One belt; One Road **(ஒரே பிராந்தியம்; ஒரே பாதை)** என்ற இந்தத் திட்டத்தில் சீனா மிகப் பெரிய வெற்றி அடைந்திருக்கிறது. இலங்கைக்கு சீனாவும் இந்தியாவும் மிகவும் நட்பு நாடுகள். ஆனால், சீனாவுக்கும் சீன முதலீடுகளுக்கும் இலங்கை முக்கியத்துவம் கொடுக்கிறது. சர்வதேச அழுத்தங்களை சமாளிப்பதற்கு இலங்கை கையாளும் இராஜதந்திரம் இது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐநா பாதுகாப்பு சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் வந்தால், சீனா தன்னைப் பாதுகாக்கும் என்பது இலங்கையின் நம்பிக்கை. இலங்கை, சீனாவின் பக்கம் கூடுதல் சார்பு நிலை எடுப்பதற்கு இதுதான் காரணம் என்பது மறுக்க முடியாத உண்மை. இந்தப் பலவீனத்தை தனது பலமாகவே சீனா பயன்படுத்துகிறது.

உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் இலங்கை தொடர்பான நிலைப்பாடு தொடர்பில் சீனாவுக்கு எதிராக அழுத்தங்கள் அதிகரித்திருக்கும் நிலையிலும், இலங்கை விமானப்படைக்கு அதிநவீன தொழில்நுட்ப உதவிகள் வழங்கப் போவதாக சீனா உத்தியோகபூர்வமாக கடந்த வாரம் அறிவித்திருக்கிறது. இது இலங்கையை கைவிடமாட்டோம் என்ற சீனாவின் உறுதியான நிலையையே காட்டுகிறது.

எனவே, சீனாவின் நவகாலனித்துவ செயல்பாடுகளுக்கு எதிராக நாம் விழிப்படைய வேண்டிய நேரம் இது என்பதை சகலரும் கட்சி அரசியலுக்கு அப்பால் சிந்திக்க வேண்டும்.

முளையிலேயே இதனை கிள்ளியெறிய தவறினால், 'வெள்ளையனே வெளியேறு' போராட்டம் போல, சீனர்களுக்கு எதிரான போராட்டம் வெடிக்கும் வாய்ப்பு இருக்கிறது.

# ஆறு மாதங்களுக்குத் தேவையான அரிசி கையிருப்பில்...

**நமது நிருபர்**

'அடுத்த 6 மாதங்களுக்குத் தேவையான அரிசி, கையிருப்பில் உள்ளது. எனவே, நாட்டில் அரிசிக்குத் தட்டுப்பாடு எதுவும் ஏற்படாது. அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்பவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இந்த விடயத்தில் தளர்வுப் போக்குக்கு இடமே இல்லை.'

இவ்வாறு விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

விவசாயிகளிடமிருந்து இம்முறை நாட்டு அரிசி நெல் ஒரு கிலோ 50 ரூபாவுக்கும், சம்பா அரிசி நெல் 52 ரூபாவுக்கும், பச்சை நெல் 44 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படும். மேற்படி விலைகளே நிர்ணயிக்கப்பட்டன.

நெல்சந்தைப்படுத்தும்சபைஊடாகஇன்று முதல் நெல் கொள்வனவு செய்யும் நடவடிக்கை ஆரம்பமாகும். ஏனைய காலப்பகுதி போல் தாமதம் ஏற்படாது. விவசாயிகளுக்கு உடன் பணம் வழங்குவதற்கான ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது.

# உயர் கல்விக்காக வெளிநாடு செல்லும் மாணவர்களுக்கு தடுப்பூசி

**நமது நிருபர்**

உயர்கல்வி மற்றும் மேலதிக கல்வி நடவடிக்கைகளுக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் மாணவர்களுக்கு கொவிட் தடுப்பூசி செலுத்தும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முற்பதிவின் அடிப்படையில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதோடு நேற்று (02) முதல் அதற்கான பதிவுகளை மேற்கொள்ள முடியுமென கொவிட்-19 பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையம் அறிவித்துள்ளது.

இது தொடர்பானபதிவுகளைமேற்கொள்ள pre-departure-vaccine.covid19.gov.lk எனும் இணையத்தளத்திற்கு பிரவேசிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பதிவைத் தொடர்ந்து இரு நாட்களில் உரிய தொலைபேசி இலக்கத்திற்கு SMS மூலம் உரிய திகதி மற்றும் இடம் தொடர்பான விடயங்கள் அனுப்பி வைக்கப்படுமெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## இம்மாதம் பாடசாலைகள்...

அதற்கமைய பாடசாலைகள் திறக்கப்பட முன் அனைத்து ஆசிரியர்களுக்கும் தடுப்பூசி நிச்சயம் அளிக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

50 மாணவர்களுக்கும் குறைவான 1439 பாடசாலைகள், 50 தொடக்கம் 100 மாணவர்கள் வரையான 1523 பாடசாலைகள் என 2962 பாடசாலைகளை மீளத் திறக்க உத்தேசித்திருப்பதாகவும், சுகாதார நிபுணர்களின் கருத்துக்களைப் பெற்றவுடன் இறுதி முடிவை எடுப்பதாகவும் கல்வியமைச்சர் தெரிவித்தார்.

அதன்படி 100 இற்கும் குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளை, இந்த மாதத்திற்குள் திறப்பது குறித்து அவதானம் செலுத்துவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## வார இறுதியில் நாடு...

சுகாதாரசேவைகள்பணிப்பாளர்வெளியிட்டுள்ள சுகாதார வழிகாட்டுதல்களின்படி சினிமாக்கள் விடுதிகள் கேளிக்கையகங்கள் உடற்பயிற்சிக் கூடங்கள் மற்றும் பிற பொதுக்கூட்டங்களும் கண்டிப்பாக தடை செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

எனவே சுகாதார அதிகாரிகள் பிறப்பிக்கும் சுகாதார வழிகாட்டுதல்களை பொது மக்கள் கடைப்பிடிக்க வேண்டும் என அவர் கோரியுள்ளார்.

பொலிஸ் புலனாய்வு பிரிவு மூலம் தகவல்களை சேகரிக்குமாறும் பொலிஸ் நிலையங்கள் கேட்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் பொது மக்களை வீட்டுக்குள் தங்கியிருந்து தேவையற்ற பயணங்களைத் தவிர்க்குமாறு அஜித் ரோஹன கோரியுள்ளார்.

## திங்கள் முதல் புதிய...

தற்போதைய கொரோனா வைரஸ் சூழ்நிலையை மீளாய்வு செய்துள்ள நிலையில் இந்த புதிய வழி முறைகளை உள்ளடக்கிய சுற்றறிக்கை எதிர்வரும் 5ஆம் திகதி வெளியிடப்படவுள்ளதாக மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட மருத்துவர் தம்மிகா ஜயலத் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் விசேட தொழில்நுட்ப குழு நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் தொடர்பில் மீளாய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டல்கள் முழு நாட்டுக்கும் மேல் மாகாணத்திற்கும் என தனியாகவும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

## கூகிளில் இணைத்...

துறையில் ஒரு முக்கியமான செயலியாக தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சிறுவயதில் இருந்தே மென்பொருள் விஞ்ஞானியாக வர வேண்டும் என்று தனது கல்வியைத் தொடர்ந்த இந்த மாணவன் கடந்த ஒரு மாத காலமாக நாட்டில் ஏற்படுத்தப்பட்டிருந்த பயணத் தடையினை சிறந்த முறையில் பயன்படுத்தி வீட்டில் இருந்து இந்த புதிய செயலியை கண்டுபிடித்துள்ளார்.

மிகத்துல்லியமான முறையில் படங்கள் மற்றும் வீடியோக்கள் மற்றும் தரவுகளை இதனூடாக நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியும் என்பதுடன் இந்த செயலி மிகவும் அதிவிரைவு தன்மை கொண்டதாகவும் காணப்படுகின்றது.

60 மெகாபைட் கொண்ட இந்த மென்பொருளினை இணைய உலாவிகள் பிளேஸ்டோர் மூலமும் தரவிற்றம் செய்து கொள்ள முடியும். இதேவேளை குறித்த மென்பொருளை இதுவரை ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் பதிவிறக்கம் செய்துக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பக்தர்களின்றி கதிர்காம...

உற்சவத்தில் சமய சடங்குகளுக்கு மாத்திரம் முன்னுரிமையளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஆடிவேல் உற்சவம் தொடர்பில் முடிவெடுக்கும் குழு தெரிவித்துள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள உற்சவத்திற்காக ஐந்து நடன குழுக்களை மாத்திரம் இணைத்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## புலம்பெயர் மக்களுக்காக...

அனுப்பி வருகின்றனர். எனினும் இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நிதி பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான ஒரு திட்டமாக ஸ்ரீலங்கா நிதி அமைச்சரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஸவின் கையொப்பத்துடன் நேற்று வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

கல்முனை NET kalmunainet.com e paper
கல்முனைநெற் ஊடக வலையமைப்பு
பிரதான வீதி, பாண்டிருப்பு, கல்முனை. இலங்கை.
+94 77 6965343
+94 76 2933026
+94 77 3457915
kalmunainet@gmail.com
ceditorsaga@gmail.com

குறள் விருந்து

**பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை பெருகலிற் குன்றல் இனிது.**

நல்ல பண்பு இல்லாதவர்கள் அன்பு வெள்ளத்தில் நம்மை மூழ்கடிப்பதுபோல் தோன்றினாலும் அவர்களது நட்பை, மேலும் வளர்த்துக் கொள்ளாமல் குறைத்துக் கொள்வதே நல்லது.

# சீனாவின் கபட தந்திரம்

மெல்லவும்முடியவில்லை;விழுங்கவும்முடியவில்லை. இதுதான் இலங்கையின் இன்றைய நிலை. சீனாவின் அழுங்கு பிடி அப்படித்தான் இருக்கிறது.

சீனாவின் ஆதிக்கம் இலங்கையில் வலுவடைந்து வரும் நிலையில், உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் எதிர்ப்புகள் அதிகரித்திருக்கின்றன.

தன்னாதிக்கத்தை நிலை நிறுத்துவதற்கான கபடத்தனத்தோடு சீனா செயல்படுகின்றது என்பதே அரசியல் கட்சிகளின் குற்றச்சாட்டாகும். ***Deft diplomacy*** - இதுதான் சீனாவின் தாரக மந்திரம். கடன் கொடுத்து நாடுகளை தன் வசப்படுத்துவது தான் இந்த திட்டம். தாராள பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடித்து நவகாலனித்துவ வியூகங்கள் ஊடாக நாடுகளை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதே சீனாவின் நீண்ட கால திட்டமாக இருந்து வருகிறது. இந்த தந்திரோபாயத்தினுள் சிக்கிக் கொண்ட பல நாடுகளில் இலங்கையும் ஒன்று என்ற நிலை தான் இப்போது புதிய வரலாறு ஆகிக்கொண்டிருக்கிறது.

கொழும்புத் துறைமுக நகரத்தை உருவாக்கி இருப்பதன் மூலம் சீனா இலங்கையை தனது காலனியாக மாற்றுவதற்கான தனது நீண்டகால திட்டமிடலில் வெற்றி கண்டிருக்கிறதென்பதே பேருண்மை. இந்த இலக்கை அடைய அவர்கள் வகுத்த அரசியல் காய்நகர்த்தல்களும் பின்புல செயல்பாடுகளும் ஏராளம். ஒரு நாட்டின் பலவீனத்தை அறிந்து அதற்கு உதவுவதுபோல் காட்டி, ஊடுருவுவதில் உலகில் சீனாவுக்கு நிகர் சீனாதான். காலனித்துக்குள் பழகிப்போன ஐரோப்பிய நாடுகளே தலையில் கை வைக்கு மளவுக்கு சீனாவின் இராஜதந்திரம் வலுப் பெற்றிருக்கிறது. அபிவிருத்தி என்ற போர்வையில் சீன நிறுவனங்கள் ஏராளமான செயல் திட்டங்களில் இலங்கையில் ஈடுபட்டு வருகின்றன. வேலை திட்டங்களுக்கான கேள்வி மனுக்களை கோரும் போது, குறைந்த தொகைகளில் போட்டு சீன நிறுவனங்களே அவற்றைத் தட்டி செல்வதாக அரசாங்கம் காரணம் சொல்கிறது. இதில் உண்மை இருந்தாலும் சீனாவின் கபடத்தனமும் மறைந்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

யாழ்ப்பாணத்தில் நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவுகளில் மின் உற்பத்தி நிலையங்களை அமைப்பதற்கான பொறுப்பு சீன நிறுவனங்களிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளன. கேள்வி மனு கோரலிலேயே சீன நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டதாக அரசாங்கம் அறிவித்தது. இரகசியமாகவே கொடுக்கப்பட்ட இந்தத் திட்டங்களை எதிர்த்து யாழ் மக்கள் கிளர்ந்தெழுந்த பின்புதான், அரசு இந்த மழுப்பல் அறிவிப்பை விடுத்து தெளிவுபடுத்தியது.

என்றாலும், சீனா தொடர்பில் எழுந்துள்ள எதிர்ப்பலைகள் மக்களை கொஞ்சம் சிந்திக்க வைத்திருப்பதோடு பேசு பொருளாகவும் மாறியிருக்கிறது. திஸ்ஸமகாராம வாவியை புனரமைக்கும் பணி கூட சீனாவிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சீனாவின் மக்கள் இராணுவத்தின் *(peoples Army)* சீருடையை ஒத்த ஆடையை அங்கு பணியாற்றுவோர் அணிந்திருந்ததால் நாட்டில் பெரும் சலசலப்பு ஏற்பட்டதோடு மக்களும் ஆச்சரியப்பட்டனர். இதனை முற்றாக மறுத்திருக்கும் சீன தூதரகம், "சீன இராணுவம் இலங்கையில் இல்லவே இல்லை" என்று அறிவித்திருக்கிறது. இலங்கையும் அதனை ஏற்றுக்கொண்டது.

ஒரு வாவியை தூர்வாரும் பணியைக் கூட சீனாவிடமா? கொடுக்க வேண்டுமென்ற கேள்வி மக்கள் மத்தியில் புகைந்து கொண்டு தான் இருக்கிறது.

இதேபோல, கிளிநொச்சி பூநகரி கௌதாரி முனையில் கடல் அட்டை வளர்ப்பு நிறுவனம் ஒன்றும் இரகசியமான முறையில் செயல்பட்டு வருவது தெரியவந்திருக்கிறது. இதன் அமைவிடம் மறைவிடமாகவே இருந்திருக்கிறது. இறால் உற்பத்திக்கு பேர் போன இந்த பிரதேசத்தில், கடலட்டை உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்டிருப்பது, உள்நாட்டு மீனவர்களின் வயிற்றில் அடிக்கும் பாதகச்செயலாகும். ஆனாலும், கடற்றொழில் அமைச்சின் அனுமதியுடனேயே குறித்த சீன நிறுவனம் செயல்பட்டு கொண்டிருக்கிறது.

இவைகளெல்லாம், சீன நிறுவனங்களின் சுயாதீன செயல்பாடுகளாகவே இருக்கிறது என்பது யதார்த்தமான உண்மை. என்றாலும், இதன் பின்னணியில் அரசியல் இருக்கிறதென்பதே அரசியல் ஆய்வாளர்களின் கருத்தாகும்.

உண்மையில், சீனா தன்னுடைய இலக்கை அடைவதற்காக எடுத்து வைக்கும் தந்திரோபாய காலடிகள் இவைகள் என்பது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம்.

தென்கிழக்கு ஆசிய அரசியலில் சீனாவின் வகிபாகம் வலுவாகவேஇருக்கிறது. இதில், இலங்கை-சீனஉறவுமிகவும்அன்னியோன்யமாகவே தொடர்ந்து கொண்டிருக்கிறது.

மிகுதி 2ஆம் பக்கம்



# கிழக்கில் சீனர்களுக்கு இடமில்லை!

கொழும்பு துறைமுகநகரா விவகாரத்திற்கு பின்பு இலங்கையில் சீனர்களின் ஊடுருவல் பற்றி அதிகமாக பேசப்பட்டு வருகிறது.

குறிப்பாக வடக்கு கிழக்கு அம்பாந்தோட்டைப் பகுதிகளில் சீனர்களது நடமாட்டமிருப்பதாக ஊடகங்களில் அறியமுடிகிறது.

இந்நிலையில் கிழக்கும் சீனர்களது தளமாகலாம் என்ற கதையும் அரசல்புரசலாக அடிபட்டு வரும் இன்றைய காலகட்டத்தில் அதுதொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்களது கருத்துக்களும் அதற்கு ஆப்பு வைத்தாற்போல் கிழக்கு ஆளுநரின் பதிலும் அமைந்திருக்கிறது.



வடகிழக்கில் சீனர்களின் ஆதிக்கத்திற்கு இந்த அரசாங்கம் இடமளிக்கின்றது என்றால் நேரடியாக அது இந்தியாவின் பாதுகாப்பினை பாதிக்கும் வகையில் நேரடியாக இந்தியாவின் பகையினை சம்பாதிக்கக்கூடிய நிலையினையே இந்த அரசாங்கம் ஏற்படுத்தி வருகின்றது என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

இலங்கையானது சீனாவின் மாகாணம் போன்று செயற்பட உள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை கிழக்கினை மீட்கப்போகின்றோம் என்று கூறிவிட்டு வந்தவர்கள் எதனையும் மீட்க முடியாமல் நிற்கின்றனர். வருங்காலத்தில் சீனாவிடமிருந்தும் கிழக்கினை மீட்க வேண்டிய நிலைமையும் வரலாம் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

பல நாடுகளை சீனா இவ்வாறு தன்வசமாக்கியுள்ளது. ஜன்டியா போன்ற நாடுகளில் சந்தைகளில் கோழி விற்பனை செய்பவர்கள் கூட சீன நாட்டவர்களாகவே உள்ளனர். அவ்வாறு இருக்கும் போது நாங்கள் மட்டுமே அவர்களை அழைத்து தொல்லையை வீட்டுக்குள் எடுக்கின்றோம்.

சீனர்களுக்கு அநுராதபுரத்தில் பொலநறுவையிலையோ இருப்பதை விட வடகிழக்கில் தான் கரையோரப்பகுதி மூன்றில் இரண்டு உள்ளது.

இன்று கடலட்டை வளர்ப்பார்கள் நாளை கொச்சி தோட்டம் செய்வார்கள் எங்கள் ஆற்றில் வந்து மீன்பிடிப்பார்கள்.இது சீனாவின் ஊடுருவல் திட்டம். துறைமுக நகரமென்பதை காட்டி வரி செலுத்தாமல் இருப்பதற்கான திட்டமாகவும் இருக்கலாம் என்றும் கருத்துக்கிறார்.

சீனாவின் கொலனியாக இலங்கை மாறுவதாக பொய்யான பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கால்நடைகள் இராஜாங்க அமைச்சர் டி.பீ.ஹேரத் தெரிவித்துள்ளார்.




கிழக்கு மாகாணத்தில் சீனர்களுக்கு இடம் இல்லை என கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா ஜஹம்பத் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள விவசாயிகளும் மீனவர்களும் இல்லை சாதாரண பாமர மக்களும் தங்களது கால்களில் நிற்கும் ஒரு நிலை உருவாகுமாக இருந்தால் சீனர்கள் இல்லை எந்த நாட்டவரும் இங்கே வந்து தொழில் செய்ய வேண்டிய தேவைப்பாடு கிடையாது.

ஆகவே, எமது மாகாணத்தில் சாதாரண மக்களது வாழ்வாதாரத்தை உயர்த்துவது தான் எனது நோக்கம். கிழக்கு மாகாணத்தை பொறுத்த வரையில் சீனர்களை பற்றி பயப்பட எதுவுமே இல்லை என தெரிவித்துள்ளார்.

# டெல்டா வைரஸுக்கு எதிராக 90% தடுப்பாற்றல் கொண்டது ஸ்புட்னிக் V தடுப்பூசி




கொரோனா வைரஸ் டெல்டா, டெல்டா பிளஸ் எனத் திரிந்து உருமாறி அச்சுறுத்தி வரும் நிலையில், அத்தனை வகையான டெல்டா திரிபுகளுக்கு எதிராகவும் ஸ்புட்னிக் V தடுப்பூசி 90% திறம்பட செயல்படுவதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

கரோனாவுக்கு எதிராக இந்தியாவில் கோவாக்சின், கோவிஷீல்டு, ஸ்புட்னிக் ஏ தடுப்பூசிகள் வழங்கப்படுகின்றன. அதேபோல், வெளிநாடுகளில் ஃபைசர், மாடர்னா தடுப்பூசிகளும் ரஷ்யாவின் ஸ்புட்னிக் V தடுப்பூசிகளிலும் பயன்பாட்டில் உள்ளன. சீனாவிலும் அதன் நட்பு நாடுகளிலும் சினோவாக் வழங்கப்படுகிறது.

இந்நிலையில், கரோனா வைரஸ் பல்வேறு விதமாக உருமாறி அதில் டெல்டா வகை திரிபு மட்டும் அதிக பாதிப்பை ஏற்படுத்துவதாக உலகை அச்சுறுத்தி வருகின்றன.

இந்தியாவில் கண்டறியப்பட்ட 'டெல்டா வைரஸின் மரபணு வரிசையில் 'K417N' எனும் புதிய திரிபு (Mutation) ஏற்பட்டுள்ளது. இந்த வேற்றுருவத்துக்கு 'டெல்டா பிளஸ் வைரஸ்' (B.1.617.2.1 அல்லது AY.1) எனப் பெயரிடப்பட்டுள்ளது. பூட்டுக்குள் சாவி நுழைவது போல இந்த வைரஸ் நம் உடல் செல்களுக்குள் 'ஏசிஇ2' புரத ஏற்பிகளுடன் இணைந்து நுழையும் கூர்ப்புரதங்களில் (Spike proteins) இந்த மாற்றங்களைச் செய்துள்ளது.

இதன் மூலம் செல்களில் கூர்ப்புரதப் பிணைப்புகள் வலுவடைந்து, டெல்டா வைரஸைவிட அதிவேகமாகப் பரவும் தன்மையைப் பெற்று விடுகிறது. மேலும், கொரோனாவை ஆரம்பத்தி லேயே முறியடிக்கும் 'ஒற்றைப்படியாக்க எதிரணு மருந்துகள்' (Monoclonal antibodies) மற்றும் தடுப்பூசிகளிடமிருந்தும் கூடத் தப்பித்துவிடும் அளவுக்கு வீரியமிக்கதாகக் கருதப்படுகிறது.

அதனால், 'விஓசி' (Variant of concern) எனும் கவலை தரும் பிரிவுப் பட்டியலில் மத்திய அரசு இதனை சேர்த்துள்ளது.

ஆனால், இந்தவகை டெல்டா திரிபுகளை தங்களின் ஸ்புட்னிக் V 90% திறம்பட எதிர்க்கும் என அதனைத் தயாரித்த ரஷ்யாவின் காமாலையா இன்ஸ்டிடியூட் தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸை எதிர்கொள்வதில் ஸ்புட்னிக் V தடுப்பூசி 91.6% தடுப்பாற்றல் காட்டும் நிலையில், அதன் டெல்டா திரிபுகளை எதிர்கொள்வதில் சற்றே குறைவாக 90% தடுப்பாற்றல் காட்டுகிறது என்றும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.



# தமிழ்,முஸ்லிம் சமூகங்கள் ஒருவரையொருவர் ஏமாற்றி வெற்றி பெற முடியாது

## அரசியல் ஆய்வாளர் சி.அ. யோதிலிங்கம்

**அரசியல் ஆய்வாளரும், சமூக செயற்பாட்டாளரும், சட்டத்தரணியும், ஓய்வு பெற்ற ஆசிரியரும், சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தின் இணைப்பாளருமான சி.அ.யோதிலிங்கம் அவர்கள் கல்முனை நெற் ஊடகத்திற்கு வழங்கிய நேர்காணல்**

**தமிழ் அரசியல் புலத்தின் இன்றைய நிலை என்ன?**

தமிழ் அரசியல் புலத்தின் இன்றைய நிலை மிகவும் கவலைக்குரியதாக உள்ளது. இதுவரை காலமும் தமிழ் மக்கள் ஒரு கட்டுறுதியான அரசியல் சமூகமாக இருந்தனர். கொள்கை உறுதியுடன் அரசியல் தீர்மானங்களை எடுத்திருந்தனர். இன்று அது குழம்பிப்போயுள்ளது. கடந்த பாராளுமன்றத் தேர்தலில் இப் போக்கு வடக்கிலும், வன்னியிலும், கிழக்கிலும் வெளிப்படையாகத் தெரிந்தது. இம் மூன்று பிரதேசங்களிலும் தென்னிலங்கை மையக் கட்சிகள் அல்லது அவற்றிற்கு ஆதரவான கட்சிகள் கணிசமான வாக்குகளையும், ஆசனங்களையும் பெற்றிருந்தன. யாழ்ப்பாண மாவட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் போட்டியிட்டிருந்த அங்கையன் இராமநாதன் அதிகூடிய விருப்பு வாக்குகளினால் வெற்றிபெற்றிருந்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆசனத்தைப் பெற்றமை இதுவே முதல் தடவையாகும்.

> தமிழ் தரப்பிடம் ஒருங்கிணைந்த அரசியலை காணமுடியவில்லை

வன்னியில் தென்னிலங்கை மையக் கட்சிக்கு ஆதரவான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் வெற்றிபெற்றிருந்தார். மட்டக்களப்பு மாவட்டத்தில் தென்னிலங்கை மையக் கட்சிக்கு ஆதரவான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளைச் சேர்ந்த சிவனேசதுரை சந்திர காந்தன் அதிகூடிய விருப்பு வாக்குகளினால் வெற்றிபெற்றிருந்தார். இதைவிட பொதுஜன முன்னணியில் நேரடியாகப் போட்டியிட்ட வியாழேந்திரனும் வெற்றி பெற்றிருந்தார். அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்களுக்கான ஒரு ஆசனமும் இல்லாமல் போனது. இங்கு கருணா அம்மான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைவிட அதிக வாக்குகளைப் பெற்றிருந்தார்.

இவையெல்லாம் தமிழ்த் தேசிய அரசியலிருந்து தமிழ் மக்களில் ஒரு பிரிவினர் விலகிச் செல்கின்றனரா? என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளது. அடுத்த விடயம் தமிழ்த் தேசியக் கட்சிகள் எனக் கூறப்படுபவை இன்று பலமான ஜனநாயகக் கட்டமைப்புக்களைக் கொண்டவையாக இல்லை. ஒப்பீட்டு ரீதியில் ஓரளவு ஜனநாயகத் தன்மை வாய்ந்த தமிழரசுக் கட்சியும் இன்று சிதைந்துபோயுள்ளது. இன்று செயற்படுகின்ற தமிழ்த் தேசியக் கட்சிகயை அரசியல் கட்சிகள் என்று கூறுவதை விட தேர்தலில் போட்டியிடும் குழுக்கள் எனக் கூறலாம்.

மூன்றாவது விடயம் இன்று தமிழ் மக்கள் இரண்டு பெரிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளனர். ஒன்று ஆட்சியிலிருக்கும் பெரும் தேசியவாதத்திற்கு முகம் கொடுப்பதாகும். இரண்டாவது சர்வதேச அரசியலைக் கையாள்வதாகும். இரண்டுக்கும் முகம் கொடுக்க வேண்டுமானால் ஒருங்கிணைந்த அரசியல் அவசியமானதாகும்.

ஆனால் துரதிஸ்டவசமாக இவ் ஒருங்கிணைந்த அரசியலை மருந்திற்குக்கூட தமிழ்த் தரப்பிடம் காண முடியவில்லை. இவ் ஒருங்கிணைந்த அரசியல், அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள், உலகத் தமிழர்கள், உலக முற்போக்கு ஜனநாயக சக்திகள் என பரந்துபட்ட அடிப்படை முன்னெடுக்க வேண்டியுள்ளது. எனவே மேற்குறிப்பிட்ட விடயங்களை சீர் செய்து முன்னெடுக்கும் போதே தமிழ் அரசியல் சீரான பாதையில் செல்லும் எனலாம்.

> “ தமிழரும் சிங்களரும் போர்புரிந்தால் நாங்கள் நீந்துவோம் அவர்கள் ஐகியப்பட்டால் நாங்கள் மூழ்குவோம என்பதே முஸ்லீம்களின் அரசியல் போக்காக உள்ளது. இந்த விவகாரத்தில் இரு சமூகங்களும் அனைத்து மட்டத்திலும் மனந்திறந்த உரையாடல்களை நடாத்த வேண்டும். அதன்மூலமே முன்னேற்றங்களைக் காணமுடியும். முஸ்லீம்கள் சிறிலங்கா அரசுடன் இணைந்து அதிகாரக் கட்டமைப்பில் தமிழ் மக்களைப் புறக்கணிப்பது நீண்டகாலத்திற்கு வெற்றியைக் கொடுக்கப்போவதில்லை. கிழக்கு மாகாணத்தில் இடம்பெறும் அதிகாரச் சிக்கல்களுக்கு உடனடியாக தீர்வுகாண வேண்டும். ”




**அரசாங்கத்தின் தற்போதைய போக்கு சிறுபான்மை மக்களின் நிலைப்பாட்டை பாதிக்குமா?**

சிறுபான்மை என்ற சொற்பதத்தை நான் ஏற்பதில்லை. இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று தமிழ் மக்கள் சிறுபான்மை இனமல்ல, ஒரு தேசிய இனம். தமிழர் தாயமான வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் தான் பெரும்பான்மை இனமாவர். தாயகத்தை சூழ்ச்சித்தனமாக இலங்கையுடன் இணைத்ததினால் முழு இலங்கையிலும் எண்ணிக்கை தமிழ் மக்கள் சிறுபான்மையாகியுள்ளனர்.

இரண்டாவது சிறுபான்மை இனம் என்ற சொற்பதத்தை பயன்படுத்தும் போது இயல்பாகவே தமிழ் மக்களிடம் தாழ்வுச் சிக்கல் உருவாகியுள்ளது. சிறபான்மை இனம்தானே அடங்கிப் போக வேண்டும் எனவும் நினைக்கப்பார்க்கின்றனர். முஸ்லீம் மலையக மக்களும் இச் சொற்பதத்தை விரும்பப் போவதில்லை. எனவே இச் சொற்பதத்தை தவிர்க்குமாறு தாழ்மையாக வேண்டிக்கொள்கின்றேன்.

இனி உங்கள் வினாவிற்கு வருகின்றேன். தற்போது பெரும்தேசியவாதத்தின் இனவாத முகம் ஆட்சியிலிருக்கிறது. சிங்கள பௌத்த மக்களின் வாக்குகளினாலேயே வெற்றிபெற்றேன் என ஜனாதிபதி மார் தட்டிக்கொள்கின்றார். போர் வெற்றிதான் ஆட்சியாளரின் மூலதனம்.


இனப் பிரச்சினை என்பது தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாக இருப்பது அழிக்கப்படுவதுதான் இலங்கைத் தீவு சிங்கள பௌத்தர்களுக்கு மட்டும் உரியது. ஏனைய இனங்கள் இத்தீவில் வாழ்ந்துவிட்டுப் பாகலாம் ஆனால் ஒரு தேசமாக, தேசிய இனமாக இருக்கக்கூடாது. இதுதான் பெரும் தேசியவாதத்தின் அடிப்படை இலக்கு.

**நேர்காணல்**
**புவிநேசராஜா கேதீஸ்**

ஒரு தேசிய இனத்தின் ஆதாரமாக நின்று தாங்கிப்பிடிப்பவை நிலம், மொழி, பொருளாதாரம், கலாச்சாரம் என்பவையே! இத் தாங்கு தூண்களை அழிப்பதன் மூலம் தேசிய இனத்தை அழிக்க முயற்சிக்கப்படுகின்றது. சிங்களக் குடியேற்றங்கள், மொழிப்புறக்கணிப்புகள், பொருளாதாரப் பறிப்புக்கள் கலாச்சாரசிதைப்புக்கள் என்பவை இதற்காகவே இடம்பெறுகின்றன.

இது சிங்கள அரசாங்கங்களின் தீர்மானமல்ல. சிறீலங்கா அரசின் தீர்மானம் எனவே எந்த அரசாங்கம் வந்தாலும் இவற்றை மேற்கொள்ளும் அளவிலும், அணுகுமுறையிலும் மட்டும் வேறுபாடுகள் இருக்கலாம். ஒரு தரப்பு பச்சையாக மேற்கொள்ளும் மற்றைய தரப்பு மறை முகமா மேற்கொள்ளும். தற்போதுள்ள ஆட்சியாளர்கள் நாம் முன்னரே கூறியது போல பெரும் தேசியவாதத்தின் இனவாத முகத்தைச் சேர்ந்தவர்கள்.அவர்கள் இன அழிப்பை பச்சையாக மேற்கொள்வர் அவ்வாறான இன அழிப்பே தற்போது இடம்பெறுகின்றது. முழு அரச இயந்திரமும் இதற்காக முடுக்கிவிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 5 ஆம் பக்கம்



# “தமிழ் பேசும் மக்கள்”என்ற கோட்பாடு தோல்வி அடைந்து விட்டது

4 ஆம் பக்க தொடர்ச்சி.......

இந்த இன அழிப்பை எவ்வாறாவது தடுக்க வேண்டும் சர்வதேச ரீதியான பாதுகாப்புப் பொறிமுறை ஒன்றை கட்டியெழுப்புவதன் மூலமே இதனை தடுத்து நிறுத்த முடியும்.

**கிழக்கு மாகாணத்தில் தமிழ் முஸ்லீம் மக்களிடையே ஆங்காங்கே நிர்வாகச் சிக்கல்கள் நிலவுகின்றன. இந்தச் சிக்கல்கள் தீர்க்கப்படாமல் இன ஒற்றுமை என்பது சாத்தியப்படக் கூடியதா?**

கிழக்கு மாகாணத்தில் நீண்டகாலமாக தமிழ் முஸ்லீம் முரண்பாடு நிலவுகின்றது. அதனை

**ஒரு தேசிய இனத்தின் அடிப்படை நிலம், மொழி, பொருளாதாரம், கலாசாரம்**

தீர்ப்பதற்கான மூலோபாயங்களையும் தந்திரோபாயங்களையும் வகுத்து தமிழ்த் தலைமை செயற்பட்டிருக்க வேண்டும். துரதிஸ்டவசமாக தமிழ்த்தலைமை இதில் போதியளவு கவனத்தைச் செலுத்தவில்லை. போராட்ட காலத்தில் இருதரப்பும் முரண்பாட்டை ஆயுதமுனையில் தீர்க்க முற்பட்டதால் இரு சமூகத்திற்குமான இடைவெளி அதிகரித்துள்ளது. தந்தை செல்வாவின் “தமிழ் பேசும் மக்கள்” என்ற கோட்பாடு தோல்வியடைந்துவிட்டது என்றே கூற வேண்டும்.

முஸ்லீம்கள் சிங்களத் தரப்புடன் இணைந்து எமக்கு எதிராக செயற்படுகின்றனர் என தமிழ் மக்கள் கருதுகின்றனர். மாறாக முஸ்லீம்கள் தமிழ்த் தேசிய அரசியல் தமது இருப்பைப் பலவீனப்படுத்தும் என நினைக்கின்றனர். வடக்கு-கிழக்கிலுள்ள இரு சமூகங்களும் ஒருவரை ஒருவர் ஏமாற்றி முன்னேறலாம் எனக் கருதுவது குறுகியகாலத்திற்கு வெற்றியைத் தருமே தவிர நீண்டகாலத்திற்கு வெற்றியைக் கொடுக்கப்போவதில்லை. ஒரு தரப்பின் உரிமையை மற்றைய தரப்பு மதித்து நடக்கும்போதே இவ் விவகாரத்தில் முன்னேற்றங்களைக் காணமுடியும்.

“தமிழரும் சிங்களரும் போரிட்டால் நாங்கள் நீந்துவோம் அவர்கள் ஐக்கியப்பட்டால் நாங்கள் மூழ்குவோம்” என்பதே முஸ்லீம்களின் அரசியல் போக்காக உள்ளது. இந்த விவகாரத்தில் இரு சமூகங்களும் அனைத்து மட்டத்திலும் மனந்திறந்த உரையாடல்களை நடாத்த வேண்டும். அதன்மூலமே முன்னேற்றங்களைக் காணமுடியும். முஸ்லீம்கள் சிறீலங்கா அரசுடன் இணைந்து அதிகாரக் கட்டமைப்பில் தமிழ் மக்களைப் புறக்கணிப்பது நீண்டகாலத்திற்கு வெற்றியைக் கொடுக்கப்போவதில்லை. கிழக்கு மாகாணத்தில் இடம்பெறும் அதிகாரச் சிக்கல்களுக்கு உடனடியாக தீர்வுகாண வேண்டும்.

**கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம், வாழைச்சேனைப் பதிவாளர் விவகாரம், மூதூர் போன்ற பிரதேசங்களிலும் நிர்வாகச் சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அரசாங்கம் இதனை வைத்து அரசியல் செய்கின்றதா?**

தமிழ்-முஸ்லீம் ஐக்கியம் வடக்கு-கிழக்கிலிருந்து அரசாங்கத்தை முழுமையாக அகற்றிவிடும் என்பதால் இவ் ஐக்கியத்தை அரசாங்கம் ஒருபோதும் விரும்பப்போவதில்லை. அது தொடர்ச்சியாக முரண்பாடுகளை வளர்ப்பதிலேயே அக்கறை செலுத்தும். கல்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரச்சினை தொடர்ந்து இருப்பதே அரசாங்கத்தின் நலன்களுக்கு நல்லது. அரசாங்கம் நினைத்தால் எப்போதோ இப் பிரச்சினையை தீர்த்திருக்க முடியும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழத்தரப்பு பல விட்டுக்கொடுப்புக்களை முஸ்லீம் தரப்பிற்கு செய்துள்ளது. நிலத்

**இலங்கை தொடர்பான இந்திய வெளிநாட்டுக் கொள்கை தோல்வி**

தொடர்ச்சியற்ற கல்விவலையம் அமைத்தபோதுகூட பெரிய எதிர்ப்பை தெரிவிக்கவில்லை. இதற்கு பிரதியுபகாரமாக அம்பாறை மாவட்டத்தில் முஸ்லீம்தரப்பு விட்டுக்கொடுப்புக்களைச் செய்ய முன்வரவேண்டும். கல்முனை நகரம் பாரம்பரியமாக தமிழ்ப்பகுதியாகும். அதனைப் பறிக்க நினைப்பது தார்மீக அறநெறிக்கு ஏற்றதல்ல.

**தமிழர் என்று சிந்திக்காமல் தமிழ்க் கட்சிகள் தனிப்பட்ட கட்சி அரசியல் நடாத்துவது ஆரோக்கியமான செயல்பாடா?**

தமிழ்த்தேசியக் கட்சிகள் விடுதலைப் போராட்ட அரசியலை நடாத்தாமல் தேர்தல் நலன் நின்று கட்சி அரசியலை நடாத்துவது தமிழ் அரசியலுக்கு ஆரோக்கியமாக இருக்கப்போவதில்லை. இந்தப் போக்கு தமிழ் அரசியலில் இடைவெளிகளை உருவாக்கும். அந்த இடைவெளிக்குள் புகுந்து தென்னிலங்கை மையக் கட்சிகள் செல்வாக்கு பெறுவதற்கே இது வழிவகுக்கும்.

நான் முன்னரும் கூறியது போல தமிழ் மக்கள் தமிழ் மக்கள் பெரும் தேசியவாதத்திற்கு முகம்கொடுத்தல், சர்வதேச அரசியலைக் கையாளல் என இரு பெரும் நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்கவுள்ளனர். இதற்கு முகம்கொடுப்பதற்கு ஒருங்கிணைந்த அரசியல் அவசியமானதாகும். ஐக்கியம் இல்லாமல் ஒருங்கிணைந்த அரசியல் சாத்தியமில்லை.

இன்று தமிழ் மக்களுக்கு தேவையானது தேர்தலில் கூத்தடிக்கும் அரசியல் கட்சிகளல்ல. மாறாக தமிழ் மக்களது அனைத்து விவகாரங்களையும் உலகம் தழுவிய வகையில் கையாளக் கூடிய தேசிய அரசியல் இயக்கமே! அரசியல் கட்சிகளையும், மக்கள் அமைப்புக்களையும் கொண்டதாக இருக்கலாம். ஆனால் மக்கள் அமைப்புக்களின் மேலாதிக்கம் இருக்க வேண்டும். இவ்வாறான ஒரு அமைப்பை கட்டியெழுப்புவதன்மூலமே அரசியல் கட்சிகளை ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியும்.

**போர் வெற்றி தான் இந்த ஆட்சியாளர்களின் மூலதனம்**

இதற்கு முதலில் கட்சி அரசியலுக்கு வெளியே வலுவான தமிழ்த் தேசியத்தளம் ஒன்றைக் கட்டியெழுப்ப வேண்டும். அதன் பின்னர் அரசியல் கட்சிகளுடன் உரையாடல் நடாத்தி தேசிய அரசியல் இயக்கத்தை கட்டியெழுப்ப வேண்டும்.

கட்சி நலன்களக்காக தமிழ்த் தேசிய அரசியலையே கவிழ்த்துக் கொட்டுவதை ஒருபோதும் நாம் அனுமதிக்க முடியாது

**இந்தியாவின் வெளிநாட்டு இராஜதந்திரம் தோல்விகண்டு இருப்பதாகவே பலரும் சொல்கிறார்கள். இந்த நிலையில் தமிழர் பிரச்சினையில் இந்தியா தொடர்ந்தும் ஈடுபடுமா?**


இலங்கை தொடர்பாக இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை தோல்வியடைந்துள்ளதாகவே நான் கருதுகின்றேன். இந்தியப் புலமையாளர்கள் பலரும் அவ்வாறே கருதுகின்றனர். போர் முடிந்தவுடன் இலங்கைத் தீவு தமது பொக்கற்றுக்குள் வருமென்றே இந்தியா நினைத்தது. அதற்கு மாறாக இலங்கைத் தீவு சீனாவின் பொக்கற்றுக்குள் சென்றுவிட்டது. இன்று இந்தியா என்னதான் முயன்றாலும் சீனாவின் செல்வாக்கை சரிக்க முடியாது. அணைத்து அமுக்குதல் என்ற தனது அணுகுமுறையின் மூலம் சீனா நீண்டதூரம் நகர்ந்துவிட்டது. கடனைக் கொடுத்தே இலங்கையை அசையவிடாமல் தடுத்துவிட்டது.

அமெரிக்கா தலைமையிலான மேற்குலகத்திற்கு இலங்கை விவகாரம் ஒரு கேந்திரப் பிரச்சினை மட்டும் தான் ஆனால் இந்தியாவிற்கு கேந்திரப் பிரச்சினையுடன் தேசியப் பாதுகாப்புப் பிரச்சினையும் உண்டு. தேசியப் பாதுகாப்புப் பிரச்சனைதான் அதற்கு முக்கியம். இந்திய பாதுகாப்புக் கொள்கையின்படி இலங்கைத் தீவு இந்தியப் பாதுகாப்பு எல்லைக்குள்தான் இருக்கின்றது. இலங்கையில் இந்தியாவுக்கு எதிரான சக்திகள் காலூன்றுவது இந்தியாவின் தேசியப் பாதுகாப்பிற்கு எப்போதும் நெருக்கடியைக் கொடுக்கும் தவிர இந்தியாவிற்கு மேற்கு , வடக்கு , வடகிழக்கு என அதன் நில எல்லை முழுவதும் பாதுகாப்புப் பிரச்சினை உண்டு. அதனால் அதன் பாதுகாப்பு மையங்கள் பல தெற்கிலேயே உள்ளன. தமிழ் நாட்டில் இது குறைவு . ஆந்திரா, கர்நாடகம் , கேரளத்தில் அதிகமாக உள்ளன. இலங்கைத்தீவில் இந்தியாவிற்கு எதிரான சக்திகள் காலூன்றினால் இந்தப் பாதுகாப்ப மையங்களுக்கெல்லாம் நெருக்கடிகள் ஏற்படும்.

தேசியப் பாதுகாப்புப் பிரச்சினை , கேந்திரப்பிரச்சினை என இரண்டுக்குமாகவே அமெரிக்கா தலைமையிலான மேற்குலகத்துடன் இந்தியா “இந்தோ — பசுபிக்” மூலோபாயக் கூட்டில் இணைந்துள்ளது. இதனால் சீனாவின் செல்வாக்கு அதிகரித்தாலும் இந்தியாவினால் இலங்கையை விட முடியாது. இந்நிலையில் இலங்கை மீது செல்வாக்கு செலுத்துவதற்கு இந்தியாவிற்கு உள்ள பிரதானமான கருவி தமிழ் மக்கள் தான். மலையக மக்களும் இன்னொரு கருவியாக விளங்குவர். இந்த இரண்டு தரப்பையும் பலப்படுத்துவதன் மூலம் தான் இந்தியாவினால் இலங்கையில் செல்வாக்கு செலுத்த முடியும். தென் இலங்கை இந்தியாவிற்கு முழுமையாகவே கதவை மூடி விட்டது. எனவே வடக்கு — கிழக்கிலும், மலையகத்திலும் இந்தியா வலுவாக காலூன்றி தென்னிலங்கை நோக்கி நகரும் போது தான் இந்தியாவினால் முன்னேற்றங்களைக் காண முடியும் .

தற்போது தமிழ் மக்கள் இந்தியாவை நோக்கி செல்ல வேண்டியதில்லை. இந்தியா தமிழ் மக்களை நோக்கி தானாக வரும். தமிழ் மக்களுக்கு இந்தியா தேவை என்பதை விட இந்தியாவிற்கு தமிழ் மக்களின் தேவை அதிகமாக உள்ளது.

> “இன்று தமிழ் மக்களுக்கு தேவை யானது தேர்தலில் கூத்தடிக்கும் அரசியல் கட்சிகளல்ல. மாறாக தமிழ் மக்களது அனைத்து விவகாரங்களையும் உலகம் தழுவியவகையில் கையாளக் கூடிய தேசிய அரசியல் இயக்கமே”



# கவிஞர் சுபத்திரன்

**வாரம் ஒரு படைப்பாளி**

மட்டக்களப்பு மண்ணின் மற்றுமொரு ஆளுமை கவிஞர் சுபத்திரன். தங்கவடிவேல் என்ற இயற் பெயரைக் கொண்ட இவர் மட்டக்களப்பில் கந்தையா,. தெய்வானைப் பிள்ளை தம்பதிக்கு மகனாக 16.04. 1935 ல் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை மட்டக்களப்பு மெதடிஸ்த கல்லூரியில்கற்றார். பின்னர் பயிற்றப்பட்ட ஆசிரியரானார். முதலில் கொழும்பிலும்,பின்னர் மட்டக்களப்பிலும் ஆசிரியப்பணியாற்றினார். சுபத்திரனுடைய இலக்கிய ஆளுமை அவரை மட்டக்களப்பில் முக்கிய கவிஞர்களில் ஒருவராக்கியது. சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராக குரல்கொடுத்து, போராட்டங்களில் கலந்துகொண்டு தனது எதிர்ப்பையும் வெளிப்படுத்தினார். ஐம்பதுகளில் தீவிர தமிழரசுக் கட்சி ஆதரவாளராக இருந்தவர்,பின்னர் கொள்கை முரண்பாட்டால் அறுபதுகளின் ஆரம்பத்தில் பிரிந்து கொம்யூனிஸ்டுகளுடன் இணைந்துகொண்டார். இதற்கு உந்துதலாக இந்தியாவிலிருந்து மட்டக்களப்புக்கு வந்து வாழ்ந்திருந்த கிருஷ்ணர் குட்டி என்பவர் இருந்திருக்கின்றார். மார்க்சிய சித்தாந்தங்களின் மூலம் அடக்குமுறைக்கு போராட வேண்டும் என்ற உணர்வு இவரிடம் இருந்தது.



அறுபதுகளின் ஆரம்பம் இனப் போராட்ட கருத்துகள் உச்சமடைந்து புரட்சிப்பாதை,பாராளுமன்றப் பாதை என வாத,பிரதிவாதம் கண்டு அணிகள் பிரிந்தகாலம். இந்தக் காலத்திலேதான் சுபத்திரன் அவர்கள் புரட்சிகர பாட்டாளி வர்க்க நிலைப்பாட்டில் நின்று உணர்வு மிக்க கவிதைகளை படைத்தவர். தமிழ் மக்கள் மத்தியில் யாழ்ப்பாணத்தில் அறுபதுகளில் நடைபெற்ற தீண்டாமைக்கு எதிராக எழுந்த போராட்டத்தில் சுபத்திரன் படைத்த கவிதைகள் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எழுச்சியை ஊட்டின. இந்த மக்களுக்காக இவர் எழுதிய பாடல்களும் எழுச்சிப் பாடல்களே. எனக்கு நினைவிருக்கின்றது இவர் எழுதிய பாடல் ஒன்று.' பாடையில் தூக்கிப் படுக்கவைத்து இந்த சாதியை கொண்டுபோய் புதைத்துவிடு'என்று தொடங்கும் பாடல். இந்த பாடலை எனது மைத்துனர் இரா. தெய்வராஜன் அவர்கள் இசையமைத்து அன்று பல மேடைகளில் பாடினார். இதே பாடலை நானும் பலதடவைகள் பாடியுள்ளேன் 2017 ல் நான்கனடா சென்றபோது உறவினர் ஒருவரின் வீட்டுக்கு என் தம்பியுடன் சென்று இருந்தேன். அங்கே சுபத்திரனின்உறவினர்களும் இருந்தார்கள். அப்போது கவிஞர் பற்றிய பேச்சும் வந்தது. அவரின் நினைவாக அவர்களுக்குஇந்த பாடலை பாடிக் காட்டினேன்.அது நெகிழ்ச்சியான தருணமாக அமைந்தது. சாதியின் பெயரால் இரண்டுபட்ட தமிழர்களை ஒன்றுபடுத்த முன்னின்ற அணியில் இருந்து செயல்பட்டவர் சுபத்திரன் அவர்கள். தீண்டாமைக்கு எதிராக குரல் கொடுத்து கவிதைகள் படைத்தவர். இவரது 'இரத்தக்கடன்' சாதியத்துக்கு எதிரான கவிதை தொகுப்பு நூலாகும். மற்றும் 'சுபத்திரன் கவிதைகள்'என்ற நூலையும் படைத்துள்ளார். கருத்து நிலையில் ஒடுக்குமுறைக்கு எதிராக கிளர்ந்து எழுந்தவர்வெகுஜனப் போராட்டங்களில் உத்வேகத்துடன் ஈடுபட்டார். மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணம் சென்றுவெகுஜன போராட்டங்கள்,தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டு அவற்றின் தாக்கத்தினால்பல கவிதைகளை எழுதினார். 1969 ல் யாழ்ப்பாணத்தில் நடந்த தீண்டாமை ஒழிப்பு மாநாட்டிலே இவரின்'இரத்தக்கடன்' கவிதைத் தொகுப்பு வெளியிடப்பட்டது. இவர் சொல்லிலும் செயலிலும் பொதுவுடைமைவாதியாகவே வாழ்ந்துள்ளார். இவர் இணைந்திருந்த கொம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளே இருந்த போலிஇடதுசாரிகளுக்கு எதிராக இவருடைய அரசியல் கவிதைகள் 1970 லில் வெளிவந்தன . கவிஞர் சுபத்திரன்1979 ல் அகால மரணமடையும்வரை ஏராளமான கவிதைகளை எழுதியுள்ளார். மட்டக்களப்பு மக்களுக்கு பெரிதும்அறியப்படாத ஒரு கவிஞராகவே இவர் இருந்துள்ளார். ஆனாலும் எம் மண்ணின் ஆளுமை மிக்க ஒருகவிஞர், படைப்பாளி வாழ்க அவர் புகழ் நாமம்.

## கழிவிரக்கக் குளத்தில்..!

–வ.ந.கிரிதரன் –

நான்
ஆழமும், முடிவுமற்ற
கழிவிரக்கக்குளத்தில்
மூழ்கிக்கொண்டிருக்கின்றேன்.
முடிவற்ற தொடர் பயணத்தில்
பயணித்துக்கொண்டிருக்கின்றேனா?

அக்குளத்தில்
நிகழ்காலமெல்லாம்
கடந்த காலமே.
எதிர்காலம் என்றெதுவுமேயில்லை.
காலமற்ற
கழிவிரக்கவெளியது.
கடந்ததை மட்டும் நோக்கிய
காலப்பயணங்கள் மட்டுமே அங்கு
சாத்தியம்.
அங்கு காலத்துக்குப் பரிமாணம்
ஒன்றே.
கழிவிரக்கக் குளத்தில் மூழ்கையில்
நான் வருந்துவதில்லை.
துடிப்பதில்லை.
மூச்சுத் திணறுவதில்லை.
எப்பொழுதுமே அங்கு
மூழ்கிக்கொண்டிருக்கவே விரும்புகின்றேன்.

girinav@gmail.com

# இவளும் பெண் தான்

**சிறுகதை**

ஜெனிசன் – நற்பிட்டிமுனை

மாலை நேரம் மனதை மயக்கும் கடற்கரை அழகு.மெய் மறந்து இரசித்துக்கொண்டிருந்தாள் மல்லிகா. கவி வரிகள் அவளுள் ஊற்றெடுத்து ஓடிக்கொண்டிருந்தது. மனசு இதமாக இருந்தது. இப்படி ஒரு நாள் நினைவுக்கு வந்தது. சில வருடங்களுக்கு முன்னர் நடந்தவைகள் அவளது நினைவலைகளில் வந்து சேர்ந்தன. மல்லிகா சமூக சேவை என்று அர்ப்பணிப்புடன் கடமை புரிபவள். ஒரு நாள் அலுவலகத்தில் அவளை பார்க்க ஒருவர் வந்திருந்தார். கதிரை ஒன்று போடுமாறு சிற்றூழியரிடம் சொன்னாள் மல்லிகா. கதிரையில் அமர்ந்தார். நான் மதன், நாங்களும் உங்களோட இணைந்து வேலை செய்ய வந்துள்ளேன் என்றான். அதற்குரிய கடிதங்களையும் காட்டினார். மிகவும் மகிழ்ச்சி என்றாள். சமூகத்தில் உங்களை போல் அர்ப்பணிப்புடன் சேவை செய்பவர்கள் தான் வேண்டும் என கூறி விடைபெற்றார்.

மல்லிகாவும் எந்த சஞ்சலமும் இன்றி சாதாரணமாக தன் வேலைகளை பார்க்க தொடங்கினாள்.

பல நிகழ்வுகளை இருவரும் இணைந்தே நடத்தினர். பல்வேறு பாராட்டுக்க்களையும் பெற்றனர்.

வேலை திட்டங்களை பேசும் போது தனிப்பட்ட விடயங்களையும் பேச தொடங்கினர். காலங்கள் கடந்து போக நட்பாக மாறியது மல்லிகா, மதன் உறவு. மல்லிகா மதனுடன் பேசும் போது மகிழ்ச்சியாக இருப்பதாக உணர்ந்தாள். அதனால் அடிக்கடி மதனுடன் கதைக்க அழைப்பு எடுப்பாள். மதனும் அன்பாகவே பேசுவான்.

காலங்கள் கடந்து போக இருவருக்கும் இடையிலான நட்பு காதலாக மாறியது. காதல் மழையில் நனைய கவிதைகளும் பரிமாற தொடங்கின. காலம், நேரம் மறந்து கதைக்க தொடங்கினர்.

காலையில் எழுந்தவுடன் குட் மோனிங் இரவு தூங்க முன் குட் நைட் என தொடங்கி இருவரும் ஈருடல் ஒருயிராக மனதளவில் இணைந்துவிட்டனர்.



மல்லிகாவுக்கு என்றாலும் மதன் துடித்துப்போவான். அதை செய்ங்க, இதை செய்ங்க என சொல்லிக்கொண டேயிருப்பான். மல்லிகா பல சமயம் கண் கலங்குவாள் இப்படி ஒரு அன்பு தனக்கு யாரிடமிருந்தும் கிடைக்கவில்லை என்று.

மல்லிகாவை தவறாக பேசிய சந்தர்ப்பம் எதுவுமல்லை. அவள் எது சொன்னாலும் தலையசைப்பான். பிழையாக செய்திட்டேன் என அவள் சொன்னால் கூட இல்லை நீங்கள் செய்தது சரிடாஎன்பான். எப்பவும் மல்லிகாவுக்கு அறிவுரை கூறுவான். யாருக்காகவும் நீங்க மாறவேண்டாம் நீங்க நீங்களாக இருங்க என்பான். பல சமயம் அவன் உறவு கிடைத்தமைக்கு கடவுளுக்கு நன்றி சொல்வாள். மதன் கொடுத்த தைரியம், அவன் பின்னால் இருக்கின்றான் என்ற பலம் போன்றவை தான் மல்லிகா பல பிரச்சினைகளை சமாளிக்க உதவியாக இருந்தது. மல்லிகா எதுவாக இருந்தாலும் மதனிடம் தான் முதலில் சொல்வாள். அதில் அவளுக்கு ஒரு திருப்தி.

இந்த அழகான உறவில் யார் கண் பட்டதோ தெரியாது. மதன் ஒரு மாத காலமாக தனக்குள்ளே புழுங்கிக்கொண்டிருந்தான். இன்று எப்படியோ சொல்லி விடவேண்டும் என நினைத்தான். மல்லிகா கொஞ்சம் பேசணும் என அழைத்தான். வார்த்தைகள் தடுமாற வாய், ரேக்கெயார் என்று நகர்ந்தான். மல்லிகாவுக்கு ஒரே குழப்பம்.

ஒரு நாள் மல்லிகாவின் காலை தொட்டான். அவள் வேகமாக என்னாச்சு மதன் என்று காலை எடுத்தாள். என்ன வேலை இதென்று கண்கலங்கினாள். அவளுக்கு எதுவும் புரியவில்லை. சில நாட்கள் வேகமாக ஓடின.

ஒரு நாள் அலுவலகத்திற்கு சென்ற மல்லி~ ... காவை அழைத்~ ... தான். அவளும் ... அவனை ... பார்க்கும் ... மகிழ்ச்சியில் கற்பனைகள் சுமந்தவளாக உள்ளார புன்னகையுடன் சென்றாள். மல்லிகா நான் வெளிநாடு போகவேண்டும் என போட்டுடைத்தான். அதிர்ந்து போனாள். உலகமே இருளானது போல் உணர்ந்தாள். பேச

njhlh;r;rp 9 Mk; gf;fk;

# தமிழை நேசிக்கும் பன்முக திறமையாளர்

## மங்களேஸ்வரி



திருகோணமலையில் ஒரு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த கதிரவேல். மங்களேஸ்வரி வளர்ந்து வரும் எழுத்தாளர்களில் ஒருவராய் வலம் வந்து கொண்டிருக்கிறார். ஆரம்பக் கல்வி முதல் உயர்தரக் கல்வி வரை திருகோணமலை தி /மெதடிஸ்த பெண்கள் கல்லூரியில் கல்வி பயின்றவர். பாடசாலையில் கல்வி பயின்ற காலங்களில் கோட்ட மட்டம், மா~காணமட்டத் தமிழ்த் தினப் போட்டிகளிலும், சைவசமயப் போட்டிகளான கட்டுரை போட்டிகள், பேச்சுப் போட்டிகள், இலக்கிய விமர்சனப் போட்டிகள் போன்றவற்றில் கலந்து சிறப்பித்து சான்றிதழ்களையும், பதக்கங்களையும் பெற்றுள்ளார்.

பாடசாலையில் நடத்தப்படும் நி~கழ்வுகளில் நாடகங்களை தானே இயக்கியும் நடித்தும் வந்ததோடு, எல்லோர் மத்தியிலும் பாராட்டுக்களையும் பெற்றார். மேலும் பேண்ட் வாத்தியக் குழுவில் இணைந்து வாத்தியங்களையும் இசைத்து வந்தார்.

தனது பள்ளிப் பருவத்திலிருந்தே தமிழ் மீது அதிக பற்றுடை~யவராய் காணப்பட்ட இவர் தமிழ் இலக்கியச் செய்யுகள், கவிதைகளை வாசிப்ப~திலும் அதிக நாட்டம் கொண்டவராயும், தனது மேடைப் பேச்சுக்களில் தமிழின் தொன்மையினையும், அதன் பெருமையி~னையும் நலுவவிடாது பேசும் பேச்சாற்றல் கொண்டவர~ாயும் காணப்படும் மங்களேஸ்வரி தனது இலக்கிய உலகை



நோக்கி நடை போடத் தொடங்கினார்.

அதனைத் தொடர்ந்து தற்போது பேரா~தனை தேசிய கல்வியியற் கல்லூரியில் தமிழ் பாட ஆசிரியப் பயிலுனராக கல்வி கற்று வரும் இவர் அங்கும் தனது திறமை~களை வெளிப்படுத்தி தனக்கென்றவொரு அங்கிகாரத்தை நிலைநாட்டி வருகிறார்.

தேடல், வாசிப்பு, எழுத்து என்பவை இவரு~டைய பள்ளிப் பருவத்திலிருந்தே தொடங்கியது. வாசிப்பின் விசையினால் கவரப்பட்டு தன்னுடைய பூர்வீகம் தொடர்பாகவும், இராவணன் தொடர்பான வரலாற்று நூல்கள், சாதனையாளர்களின் வரலாறுகள், பல்வேறுபட்ட எழுத்தாளர்களின் கவிதைகள், சிறுகதைகள் போன்ற இன்னும் பல்வேறுபட்ட நூல்களை கற்று ஒரு வாசகியாக வாசி~ப்புலகில் பிரவேசித்துக் கொண்டிருக்கும் இளம் படைப்பாளியான மங்களேஸ்வரியின் முதலாவது கவிதையான "உன்னுள் நான் " என்ற கவிதை "நீங்களும் எழு~தலாம்" என்ற சஞ்சிகையில் வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து கல்முனை பரிமாணம் என்ற பத்திரிகையில் கவி~தகள், சிறுகதை விமர்சனம், திருகோணமலையின் எழுத்துலகப் படைப்பாளிகள் மற்றும் தமிழர்க~ளின் பாரம்பரிய கலாசாரங்க~ளின் அறிவியல் விளக்கங்கள் போன்றவற்றினை எதிர்க~ால சந்ததியினருக்குப் பயன்~தரும் வகையில் எழுதி வருகி~றார். அதனோடு இணையவழி கலந்துரையாடல்களிலும் கலந்து கொண்டு தனது திறமையினை வெளிப்படுத்~தி வருகிறார். மேலும் ஓவியம் வரைவ~திலும் இவருக்கு ஆர்வம் அதிகம். எதிர்காலத்தில் கவிதைத் தொகுப்பு நூல் ஒன்றினை வெளியிட இருக்கும் மங்களேஸ்வரியின் திறமைகளைப் பாராட்டி அவருக்கு வழிகாட்டியாய் எழுத்துலகில் பிரவேசிக்கத் துணை புரிந்தவர்களில் திருமலை பொது நூலக உறுப்பினரும், ஊடகவியலாளரான திரு அ.அச்சுதன், சிறகுகள் கல்வி நிலைய ஆசிரியரும், தனது தமிழ்பாட ஆசானுமான திரு. தி.பவித்திரன், புகழ் பெற்ற எழுத்தாளர் மதிப்பிற்குரிய நந்~தினி சேவியர் போன்ற பலரினுடைய தட்டிக் கொடுப்புக்களும், வழிகாட்டலுமே இவரை உயர்த்தியது எனலாம். "தட்டிக் கொடு~ப்போர் இருக்கும் வரை யாரும் கெட்டுப் போனதில்லை ." என்ற வாசகம் இளம் எழுத்தாளரான இவருக்கே பொருந்~தும் எனக் கூறலாம். மேலும் படைப்பாளியாய் பற்பல சாத சாத தனைகள் புரிந்து இலக்கிய எழுத்துலகில் அவரு~டைய சேவைகள் மேலும் தொடரவும் வெற்றி பெறவும் வாழ்த்துக்கள்.



இளம் கலைஞர் அறிமுகம்

கு.கிலசன்

# சாய்ந்தமருதின் பெண் எழுத்தாளர்

## நஸ்லின் றிப்கா அன்சார்



கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் கற்றவர். அதே பாட~சாலையிலேயே ஆசிரியத் தொழிலில் இணைந்து பின்னர் அதிபர் தரத்திற்கு உயர்த்தப்பட்டு தற்போது சாய்ந்தமருது அல்~ஹிலால் வித்தியாலயத்தில் அதிபர் தரத்தில் கடமையாற்றிகொண்டிருக்கிறார். பட்டப்பின் கல்வி முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறியை கற்று தற்போது முதுமாணிப் பட்டத்திற்காக தயார் படுத்திக் கொண்டிருக்கிறார்.

சிறு வயதில் இருந்தே கலை, இலக்கியத் துறையில் இவருக்கு இருந்த ஆர்வத்தினால் பல படைப்புகள் பல பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன. புதுக்கவிதைகள், மரபுக்கவிதைகள், போன்றனவும் கல்வி, மருத்துவம், சமயம், விழுமியம் சார்ந்த கட்டுரைகளும் இவரால் எழுதப்பட்டுள்ளன. வாழ்வியலில் சில வர்ணங்கள் எனும் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியிட்டுள்ளார். மிக விரைவில் கவிதை தொகுப்பு ஒன்றை வெளியிடவுள்ளார்.

தன்னைத் தானே செதுக்கி கவித்தீபம் கல்விச்சுடர் கலைத்தீபம் 2017இல் சாய்ந்தமருது பிரதேச செயல~கத்தால் கலை இலக்கியத் துறைக்கு பங்காற்ற~யமைக்காக கலைஞர் சுவதம் விருது தமிழா ஊடக வலையமைப்பினால் இலக்கிய முரசு எனும் விருது 2020 ஆம் ஆண்டு டீநளவ ஞநசளழைெ யுறயசன என பல விருதுகளை தன்வசமாக்கினார். இவரது ஆர்வத்திற்கும் முன்னேற்றத்திற்கும் இவருடைய தந்தையும் கணவரும் முக்கிய காரணமாக அமைந்தார்கள். இவருடைய தந்தை ஒரு கவிஞரும் வரலாற்றாய்வா~ளரும் ஆவார். இவர் ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர் ஆவார். இவரது கணவர் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் ஆங்கில விரிவுரையாளராக கடமையாற்றுகிறார்.

இலக்கிய உலகில் இன்னும் பல படைப்புக~ளால் சமூகத்தில் ஒரு நல்ல மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற ஆசையோடு நடைபோடும் இவரது இலட்சியப் பாதையில் வெற்றிக் கனிகளை சுவைக்க எமது நல்வாழ்த்துகள்.



# கண்ணாடி வளையல்கள்



வளையல்களில் கண்ணாடிவளையல்கள் அணிவது மிகச் சிறப்பாக கருதப்படுகின்றது. கண்ணாடியானது மணல் மற்றும் சிலிக்காவால் உருவாக்கப்பட்டது. வளையல் என்பது ஒரு அணிகலன் மட்டு மல்ல அது நமது தமிழ் பாரம்பரிய கலாசாரத்தின் ஒரு பகுதி.

பொதுவாக கையின் மணிக்கட்டுப் பகுதியில்தான் நாடித் துடிப்பு பார்க்கப்படும். ஆகவே வளையல்களை மணிக்கட்டுப் பகுதியில் அணியும் போது அவைகளின் தொடர்ந்த உராய்வினால் இரத்த ஓட்டம் அதிகரிக்கும். மற்றும் உடலில் பாய்கின்ற மின்சாரமானது வளையலின் வட்டவடிவத்தால் வெளியே செல்லாது மீண்டும் உள்ளே திரும்புகிறது.

கண்ணாடி வளையல்கள் எதிர்மறை சக்திகளைப் புறக்கணித்து வளிமண்டலத்திலிருக்கும் தீவினைகளிலிருந்து அணிபவர்களின் உடலைப் பாதுகாக்கின்றது. பெண்கள் பொதுவாக கர்ப்பமாக இருக்கும் போது இந்த வளையல்களின் அழகான ஒலி கருவிலுள்ள குழந்தைகளுக்கு சந்தோசத்தைக் கொடுக்கின்றன என்றும் கருவிலுள்ள குழந்தைகளுக்கு கேட்கும் திறன் அதிகரிக்கின்றன என்றும் ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

கண்ணாடி வளையல்களின் ஓசை மென்மையானது. இதனால் அணிபவருக்கும் அவரைச் சுற்றியுள்ளவர்களுக்கும் ஒரு புதுவித மனநிலை உருவாகின்றது. இதனால் அந்த இடமே அமைதியாக மாறுகின்றது.

க.மங்களேஸ்வரி – திருகோணமலை

# அன்னையே!



அன்னையே உன்னை ஆராதிக்கின்றேன்
ஆயிரம் கவி எழுதினேன்
அத்தனையிலும் பொய் உண்டு
அழகுக்காக அணி சேர்த்தேன்
உணர்வுக்காக உயிர் கொடுத்தேன்
புகழுக்காக வடிவமைத்தேன்
வருந்தம் வர வெளிப்படுத்தினேன்

உண்மையை உளறுகிறேன்
உயிர் தந்ததை சுட்டிக்காட்டுகின்றேன்
உணர்வை வெளிப்படுத்துகின்றேன்
அன்பின் அடையாளம் நீ என்கின்றேன்
என்வாழ்வின் அச்சாணியும் நீ என்கின்றேன்
அத்தனையும் உண்மை
கவிதையா தெரியவில்லை
கண் கலங்குகின்றேன்
காரணம் உன் கருணை

புத்தாண்டு என்றால்
முத்தம் தருவாய்
பிறந்தநாள் என்றால்
தோளோடு தோள் சாய்ப்பாய்
தொட்டு தடவி
தட்டிக்கொடுப்பாய்
தரணியில் ஜெயித்திட
தன்னம்பிக்கை தருவாய்
தாயாக பின்னிப்பாய்
புதுமைகள் படைக்க
புத்துணர்வு தருவாய்
தாயே உனக்கு
ஈடு இணை உண்டோ
இம்மண்ணில்
நீ. இல்லையே
நானும் பூச்சியம் தான்

மங்கையர் மகுடம்

ஜெனிதா மோகன்

## விவேகானந்தரின் பொன்மொழிகள்

1)பொய் சொல்லித் தப்பிக்க நினைக்காதே. உண்மையைச் சொல்லி மாட்டிக் கொள் ஏனென்றால் பொய் வாழ விடாது உண்மை சாக விடாது.

2).நீ எதை நினைக்கிறாயோ அதுவாக ஆகின்றாய் உன்னை வலிமை உடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவன் ஆவாய்.

3)வெற்றிகளை சந்தித்தவனின் இதயம் பூ போல் மென்மையானது தோல்விகளை மட்டுமே சந்தித்தவனின் இதயம் இரும்பை விட வலிமையானது.

4)உன்மீது உனக்கே நம்பிக்கை இல்லை என்றால் கடவுளே நேரில் வந்தாலும் பயனில்லை.

5)எனக்கு எதுவும் தெரியாதே என்று எண்ணும் வரை மனிதனால் எதையும் சாதிக்க முடியாது.

சிறுவர் கதை

# கை மேல் பலன் கிடைத்தது

அரசன் ஒருவன் சகுனங்களில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவன். அரண்மனை சோதிடர் இந்த நம்பிக்கை மேல் குளிர் காய்ந்து கொண்டிருந்தார். ஒரு நாள் இப்படித்தான் அரசே, அதிகாலை எழுந்தவுடன் இரண்டு காக்கைகளை ஒன்றாகப் பார்த்தால் அன்றைய நாள் சிறக்கும் என்று நம்பிக்கை ஊட்டினார்.



மன்னன் சேவகனை அழைத்தான். காலையில் எங்காவது இரண்டு காக்கைகள் தென்பட்டால் உடனே தனக்குத் தெரிவிக்க வேண்டும் என்று கட்டளையிட்டான். அதன் பின் தினமும் பொழுது விடியும் முன்பே சேவகன் தெருவில் அலையத் தொடங்கி விடுவான்.

ஒரு நாள் அரண்மனைக்குப் பக்கத்துத் தெருவில் இரண்டு காக்கைகள் ஒன்றாக அமர்ந்திருப்பதைக் கண்டான். அடடா! நல்ல சகுனம், இன்று மன்னர் நமக்கு நிச்சயம் பதவி உயர்வு கொடுப்பார் என்று மகிழ்ச்சி மிகுதியுடன் மூச்சிரைக்க ஓடி வந்து மன்னரிடம் விபரம் சொன்னான். இதைக் கேட்டு துள்ளி எழுந்த மன்னன் சேவகனுடன் அந்த இடத்திற்கு ஓடினான். அதற்குள் ஒரு காக்காய் அவசரமாக பறந்து போய் விட்டது.

மன்னனுக்கு மூக்கின் மேல் கோபம் வந்து விட்டது. தளபதியை அழைத்து இந்தப் பொறுப்பற்ற சேவகனுக்குப் பத்து கசையடி கொடு என்று உத்தரவிட்டான்.

சேவகன் சிரிக்க ஆரம்பித்து விட்டான். இடுக்கண் வருங்கால் நகுக என்று படித்துப் புரிந்து வைத்திருந்தவன் போலும். மன்னனுக்கு ஆத்திரம் இன்னமும் அதிகமானது. நீ சிரித்ததற்கு சரியான காரணம் சொல்லாவிட்டால் இன்னமும் பத்து கசையடி என்று உறுமினான்.

சேவகன் சொன்னான். மகா மன்னரே. இன்று நான் மட்டும்தான் அதிகாலையில் இரட்டைக் காக்கைகளைப் பார்த்தேன். கை மேல் பலன் கிடைத்து விட்டது அல்லவா? என்றான்.

மன்னருக்கு சுருக்கென்று ஏதோ உரைத்தது.

## விடுகதைகள்:


1. இரவும் பகலும் ஓய்வு இல்லை
படுத்தால் எழுப்ப ஆள் இல்லை அவன் யார்?
2. எட்டாத ராணி இரவில் வருவாள்
பகலில் மறைந்து விடுவாள் அவள் யார்?
3. உயிர் இல்லாத நீதிபதி
ஒழுங்காக நியாயம் சொல்கிறார் அவர் யார்?
4. உலகமெங்கும் படுக்கை விரித்து
உறங்காமல் அலைகிறான் அவன் யார்?
5. ஆண்டுக்கு ஆண்டு வரும் வரி
அடுத்தடுத்து வரும் வரி அது என்ன?



**விடைகள்:**

1. இதயம் 2. நிலா 3. தராசு 4. காற்று 5. ஜனவரி,பிப்ரவரி

கன்று
கி.அருள்மலர்



S.Thuvaragesh
First step school
Trincomalee

# தமிழக ஊடகத்துறையில் திறமைக்கே முன்னுரிமை

## பூஜிதா



இன்றைய காலகட்டத்தில் பல திறமைகள் கொண்டவர்கள் நம் மத்தியில் இருக்கத்தான் செய்கின்றனர் தென்னிந்திய ஊடகத்துறை எடுத்துக்கொண்டால் திறமைக்கு அங்கு முன்னுரிமை வழங்கப் படுகின்றது அந்த வகையில் தொலைக் காட்சி அறிவிப்பாளர் நாடக நடிகை நெடுந்தொடர் நடிகை பின்னணி குரல் வழங்குபவர் என பல்வேறு திறமைகளை தன்னகத்தே கொண்ட ஊடகத்துறையில் பிரகாசிக்கும் பூஜிதாவை சந்திக்கும் வாய்ப்பு நமக்கு கிடைத்தது இலங் கையின் கள்முனைநெற் ஊடகம் என்றதும் இன்முகத்துடன் தனது அனுபவங்களை எம்முடன் பகிர்ந்து கொண்டார்.

**உலகப்புகழ் பெற்ற சன் டிவி தொலைக்காட்சி இணைந்து கொள்ளும் வாய்ப்பு உங்களுக்கு எவ்வாறு கிடைத்தது?**

சன் டிவி வணக்கம் தமிழா நிகழ்ச்சியை தொகுத்து வழங்குவதற்காக தொலைக்காட்சி அறிவிப்பாளர்கள் தேர்வு இடம் பெற்றது.

இதன் மூலம் எனக்கு சன் டிவியில் இணைந்துகொள்ளும்வாய்ப்புகிடைத்தது நேர்முகத் தேர்விலும் ஒப்பனை அலங்காரத்திலும் வெற்றி பெற்று சான்றிதழ் அறிவிப்பாளராக தெரிவுசெய்யப்பட்டனர்.

**தமன்னா நடிக்கும் நவம்பர் ஸ்டோரி நெடுந்தொடரில் நடித்தது அது பற்றி கூறுங்கள்**

இந்த நெடும் தொடர் உலக மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது நீதா எனும் கதாபாத்திரம் மக்கள் மனங்களில் பேசுபொருளாக அமைந்துள்ளது என்றே கூற வேண்டும் இந்த நெடுந்தொடர் தொலைக் காட்சிகளில் ஒளிபரப்பாகி வருகின்றது.

நீதா எனும் கதாபாத்திரம் மக்கள் மனங்களில் பேசுபொருளாக அமைந்துள்ளது என்றே கூற வேண்டும் இந்த நெடுந்தொடர் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகி வருகின்றது.

**கலை உலகில் உங்களது இலட்சியம் சியம் என்ன?**

இலட்சியம் என்று கூறுவதற்கு எதுவும் இல்லை ஒவ்வொரு நாளும் திரைப் படத்துறை சார் விடயங்களில் பங்கு பெறுவதற்கு நான் கடமைப்பட்டுள்ளேன் அத்துடன் ஏனைய ஊடகத்துறை சார் விடயங்களில் பங்கு பெறுவதற்கும் நான் கடமைப்பட்டுள்ளேன்

உலகில் எத்தனை பேர் நடிகையாக வரவேண்டும் என விரும்பியுள்ளனர் எனினும் அவர்களால் அந்த இடத்தை அடைய முடியவில்லை எனக்கு அந்த இடம் கிடைத்துள்ளதுஅனைத்து துறைகளிலும் கஷ்டங்களும் சவால்களும் உள்ளன திரைப்படத் துறையை சார்ந்த ஊடகத்துறையில் நாம் பல விடயங்களை கற்றுக் கொள்ள முடியும்

நிஜ வாழ்வின் கற்றுக் கொள்ள முடியாததை எம்மால் சினிமாத் துறையில் கற்றுக்கொள்ள முடியும் எந்த கதா பாத்திரம் ஆனாலும் நடிக்க முடியும். எனது கதாபாத்திரம் மக்களுடன் வாழ வேண்டும். என எதிர்பார்க்கிறேன். அத்துடன் திரைத்துறையில் உள்ள ஜாம்பவான்கள் உடன் பணியாற் வேண்டும்.



நேர்காணல் – கிரிஷாந்

5 ஆம் பக்க தொடர்ச்சி...

## அவளும் பெண்தான்

பேச வார்த்தையின்றி மௌனமானாள். மல்லிகா ஒரு மாதமாக சொல்ல முடியாமல் தவிர்த்து கொண்டிருந்தேதன். இப்ப தான் கொஞ்சம்... என இழுத்து தலை குனிர்ந்தான். என்னால் எதையும் யோசிக்க முடியல்ல. என் கையில எதுவும் இல்லை என சொல்லி நகர்ந்தான்.

மல்லிகாவுக்கு அவனது வாகன சத்தம் காதில் விழ சுயநினைவுக்கு வந்தாள். ஓவென அழவேண்டும் போலிருந்தது. கேட்காமல் கிடைத்த வரம் நீ, சொல்லாமல் சென்றிருக்கலாம் என புலம்பினாள். அழுகையை கட்டுப்படுத்தியவளாக, நிலை குலைந்தவளாக அவ் விடத்தை விட்டு நகர்ந்தாள்.

தலையில் இடி விழுந்தது போல எல்லாமே முடிந்து விட்டது. கண்ணீர் மட்டும் சொந்தமானது. ஊமையானாள். கண்களிலிருந்து வந்த கண்ணீரை விரல்கள் துடைக்க கடல் அலைகள் அப்போது தான் அவள் காதுகளை வந்தடைந்தது. நிலைமையை புரிந்த அவளது நண்பி றாதா மல்லிகா போவோம். நேரமாச்சு, அலையில உடைகள் நனைஞ்சிற்று என்றாள். ம்ம் என்ற சத்தத்துடன் எழுந்து நடந்தாள். இந்த கடற்கரை பயணத்தில் தன்னோடு மதன் இல்லை என்று உணர்ந்தாள்.

நாட்கள் நகர்ந்தன. மதனும் வெளிநாடு போய் நீண்ட நாட்களாகிவிட்டது. அவனது தங்கை மல்லிகாவை தேடி வந்தாள். ஒரு சேலையை மல்லிகாவிடம் மதன் கொடுக்க சொன்னதாக கூறினாள்.நீங்கள் பாவம் என அடிக்கடி சொல்வான். கவலைப்படவேண்டாம் என ஆறுதலாக பேசி சென்றாள் எங்கிருந்தாலும் அவன் நன்றாக இருக்கவேண்டும் என இறைவனை தினமும் பிரார்த்திப்பாள். பல சமயம் . நெருப்பில் பட்ட புழு போல் துடிப்பாள்.

மல்லிகாவின் மனதை அவனை தவிர யாராலும் புரிந்து கொள்ள முடியாது. அவன் அவ்வளோடு எதுவித தொடர்புமின்றி அவனது கடமைகளை பார்த்தான். அவனது அழைப்புக்காக மல்லிகா காத்துக்கொண்டிருந்தாள்.தினமும் ஏமாற்றம் தான் அவளுக்கு கிடைத்தது. காலங்கள் வேகமாக நகர்ந்தன. கானல் நீர் தான் என் காதல் என கண்கலங்குவாள். வேறு என்ன செய்ய முடியும் அவளால்.

அவன் நினைவுகளை சுமந்த படி வாழ நினைத்தாள். அவன் காட்டிய அன்புக்கு அவள் செய்யும் நன்றிக்கடன் என நினைத்தாள்.

அவன் ஆசைப்படி தைரியமான பெண்ணாக, மற்றவர்களுக்கு உதவும் பெண்ணாக,வாழ்க்கையில் முன்னேறும் பெண்ணாக வாழ முடிவெடுத்தாள். அதில் வெற்றியும் பெற்றாள்.

மதனை போல் மல்லிகாவும் சமூக சிந்தனை உடையவர்கள். சமூகத்திற்காக அர்ப்பணிப்புடன் கடமை செய்பவர்கள். சுயநலமில்லாத பொதுநலமானவர்கள். நடுநிலையாக யோசிப்பவர்கள்.ஐதார்த்தத்தை புரிந்து கொள்வர்கள். மல்லிகா அவன் நினைவாக அன்பு இல்லம்ஒன்றை கட்டினாள். அனைவரையும் அன்புடன் அழைப்பாள். பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்கிறாள். பிரச்சினைகளுடன் வருபவர்கள் அதிலிருந்து மீள வழிகாட்டுவாள். அன்பின் பாதையில் பயணிக்கிறாள். தடைகளை உடைக்க அவன் அறிவுரைகளை நினைக்கிறாள். சுகமான அவன் நினைவுகளை சுமக்கிறாள்.

# பாயில் படு; நோயை விரட்டு




இது நமது தமிழ் பேச்சு பழமொழி
இதன் பொருள் காண்போம்

1) பாய் உடல் சூட்டை உள்வாங்கக்கூடியது,
2) கர்பினி பெண்கள் பாயில் உறங்குவதால் இடுப்பு வலி, முதுகு வலி வரவே வராது,
3) பாயில் உறங்கும் பழக்கமுடைய பெண்களுக்கு பிரசவ நேரத்தில் சிசேரியன் தேவைப்படாது,
4) பிறந்த குழந்தையை பாயில் உறங்க வைப்பதால் கழுத்தில் சுழுக்கு பிடிக்காது, குழந்தையின் முதுகெலும்பு சீர்படும் குழந்தை வேகமாக வளர உதவிடும்,
5) கல்வி கற்கும் மாணவ மாணவிகள் பாயில் உறங்கினால் இளம் வயது கூண் முதுகு விழாது,
6) பெரும்பாலான முதியோர்கள் தரையில் பாய் விரித்து உறங்குவதே அதிகம் விரும்புவார்கள் அதன் காரணம் 60 வயதிற்கு மேல் உடலில் இரத்த ஓட்ட பிரச்சினை இருக்கும் பாயில் சமமாக கால் கையை நீட்டி மல்லாக்க படுக்கையில் உடல் எங்கும் இரத்தம் சீராக பாய்ந்து கொழுப்பை குறைக்கிறது,
7) ஒரு பாய் மூன்று ஆண்டுகள் வரை அதன் தன்மையை இழக்காது,

இரும்பு மரக் கட்டிலில் பிளாஸ்டிக் போம் மெத்தையில் உறங்குவதை விட வெறும் தரையில் பாய் விரித்து உறங்குவது நம் உடலில் பெரும் மாற்றத்தையே ஏற்படுத்தக் கூடியது
பாயின் எண்ணற்ற நன்மைகளை உணர்ந்த நமது பெரியோர்கள் கல்யாண சீர்வரிசை கொடுக்கையில் பாய் இல்லாத ஒரு சீர்வரிசை கிடையவே கிடையாது, என்பது குறிப்பிடத்தக்கது.

# கொவிட்காலத்தில் உணவளிக்க 5வழிமுறைகள்

கொரோனா வைரஸ் நோய் (COVID-19) உலகெங்கிலும் பாரிய சவாலாகவுள்ளது. பள்ளிகளும் குழந்தை பராமரிப்பு மையங்களும் மூடப்பட்டிருப்பதால், பல பெற்றோர்கள் குழந்தை பராமரிப்பு, முழுநேர வேலை மற்றும் பிற போட்டியிடும் பொறுப்புகள் ஆகியவற்றைக் கையாளுகிறார்கள். இரவு உணவிற்கு என்ன? மற்றொரு தினசரி சவாலாக இருக்கலாம். பலருக்கு, வேலையின்மை மற்றும் இழந்த வருமானம் ஆகியவை உணவு ஷாப்பிங்கை கூடுதல் நிதி சவாலாக ஆக்குகின்றன.

பல பெற்றோர்கள் குடும்பத்திற்கு உணவளிப்பதற்கான விரைவான மற்றும் குறைந்த விலையில் தயாராக உணவு மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகளை புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும்போது, வசதியான, மலிவு மற்றும் ஆரோக்கியமான மாற்று வழிகள் உள்ளன. ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளும்போது, உங்கள் குழந்தைகளுக்கு அவர்களின் வளர்ச்சியையும் வளர்ச்சியையும் ஆதரிக்கும் மாறுபட்ட, சத்தான உணவை உண்ண உதவும் ஐந்து வழிகள் இங்கே.

### ஆரோக்கியமான உணவு குறிப்புகள்

1. பழம் மற்றும் காய்கறி உட்கொள்ளுங்கள்
புதிய விளைபொருட்களைப் பிடிக்க முடிந்த போதெல்லாம், அவ்வாறு செய்யுங்கள். புதியதாக சாப்பிடுவதால், பழங்கள் மற்றும் காய்கறிகளை முடிந்தவரை உறைந்து, அவற்றின் பெரும்பாலான ஊட்டச்சத்துக்களையும் சுவையையும் தக்க வைத்துக் கொள்ளும். சூப்கள், குண்டுகள் அல்லது பிற உணவுகளை சமைக்க புதிய காய்கறிகளைப் பயன்படுத்துவது அவை நீண்ட காலம் நீடிக்கும் மற்றும் சில நாட்களுக்கு உணவு விருப்பங்களை வழங்கும். இவை முடிந்தவரை உறைந்து பின்னர் விரைவாக மீண்டும் சூடுபடுத்தப்படலாம்.

2. புதிய தயாரிப்புகள் கிடைக்காதபோது ஆரோக்கியமான உலர்ந்த அல்லது பதிவு செய்யப்பட்ட மாற்றுகளில் இடமாற்றம் செய்யுங்கள்
புதிய தயாரிப்புகள் எப்போதுமே சிறந்த வழி, ஆனால் அது கிடைக்காதபோது ஏராளமான ஆரோக்கியமான மாற்று வழிகள் உள்ளன, அவை சேமித்து தயாரிக்க எளிதானவை.

ஏராளமான ஊட்டச்சத்துக்களை வழங்கும் பதிவு செய்யப்பட்ட பீன்ஸ் மற்றும் கொண்டைக்கடலை, மாதங்கள் அல்லது ஆண்டுகள் கூட சேமிக்கப்படலாம், மேலும் பல வழிகளில் உணவில் சேர்க்கலாம். பதிவு செய்யப்பட்ட எண்ணெய் மீன்களான மத்தி, கானாங்கெளுத்தி மற்றும் சால்மன் ஆகியவற்றில் புரதம், ஒமேகா 3 கொழுப்பு அமிலங்கள் மற்றும் வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள் உள்ளன. இவற்றை சாண்ட்விச்கள், சாலடுகள் அல்லது பாஸ்தா உணவுகளில் குளிர்ச்சியாகப் பயன்படுத்தலாம் அல்லது சூடான உணவின் ஒரு பகுதியாக சமைக்கலாம்.

தக்காளி போன்ற பதிவு செய்யப்பட்ட காய்கறிகளில் புதிய விளைபொருட்களைக் காட்டிலும் குறைந்த அளவு வைட்டமின்கள் உள்ளன, ஆனால் புதிய தயாரிப்புகள் அல்லது உறைந்த காய்கறிகள் வர கடினமாக இருக்கும்போது அவை ஒரு சிறந்த குறைவடையும் விருப்பமாகும்.

3. ஆரோக்கியமான தின்பண்டங்களின் தொகுப்பை உருவாக்குங்கள்
குழந்தைகள் பெரும்பாலும் பகலில் ஒரு சிற்றுண்டி அல்லது இரண்டு சாப்பிட வேண்டும். குழந்தைகளுக்கு இனிப்புகள் அல்லது உப்பு சிற்றுண்டிகளைக் கொடுப்பதற்குப் பதிலாக, கொட்டைகள், சீஸ், தயிர் (முன்னுரிமை இனிக்காதது), நறுக்கப்பட்ட அல்லது உலர்ந்த பழங்கள், வேகவைத்த முட்டை அல்லது உள்நாட்டில் கிடைக்கக்கூடிய ஆரோக்கியமான விருப்பங்கள் போன்ற ஆரோக்கியமான விருப்பங்களைத் தேர்வுசெய்க. இந்த உணவுகள் சத்தானவை,

4. அதிக பதப்படுத்தப்பட்ட உணவுகளை கட்டுப்படுத்துங்கள்.
சாப்பிடத் தயாரான உணவு, தொகுக்கப்பட்ட தின்பண்டங்கள் மற்றும் இனிப்பு வகைகளில் பெரும்பாலும் நிறைவுற்ற கொழுப்பு, சர்க்கரைகள் மற்றும் உப்பு அதிகம். பதப்படுத்தப்பட்ட உணவுகளை நீங்கள் வாங்கினால், லேபிளைப் பார்த்து, இந்த பொருட்களில் குறைவான ஆரோக்கியமான விருப்பங்களைத் தேர்வுசெய்ய முயற்சிக்கவும். சர்க்கரை பானங்களைத் தவிர்க்கவும், அதற்கு பதிலாக நிறைய தண்ணீர் குடிக்கவும் முயற்சிக்கவும். எலுமிச்சை, சுண்ணாம்பு, வெள்ளரி துண்டுகள் அல்லது பெர்ரி போன்ற பழங்கள் அல்லது காய்கறிகளை தண்ணீரில் சேர்ப்பது சுவையின் கூடுதல் திருப்பத்தை சேர்க்க சிறந்த வழியாகும்.

5. உங்கள் குடும்ப வழக்கத்தின் ஒரு வேடிக்கையான மற்றும் அர்த்தமுள்ள பகுதியாக சமைப்பதும் சாப்பிடுவதும் செய்யுங்கள்
ஒன்றாக சமைப்பதும் சாப்பிடுவதும் ஆரோக்கியமான நடைமுறைகளை உருவாக்குவதற்கும், குடும்பப் பிணைப்புகளை வலுப்படுத்துவதற்கும், வேடிக்கையாக இருப்பதற்கும் ஒரு சிறந்த வழியாகும்.

# ஒலிவ் எண்ணையுடன் அத்திப்பழ மருந்தை உருவாக்கும் எளியமுறை





**தேவையானவை:**
40 உலர்ந்த அத்திப்பழங்கள்
1 லிட்டர் ஒலிவ் எண்ணெய்

**செய்முறை:**
ஒரு கண்ணாடி ஜாடியில் அத்திப்பழங்களை இடவும். மேலாக ஒலிவ் எண்ணையை ஊற்றவும். இந்தக் கலவை 40 நாட்கள் ஊறவிட வேண்டும். 40 நாட்கள் ஊறியவுடன் ஒவ்வொரு நாளும் சாப்பாட்டுக்கு முன் ஒன்று வீதமாக குறைந்தது மூன்று அத்திப்பழங்களை சாப்பிட வேண்டும். இது தீருவதற்க்கு முன்பாக அடுத்த செட்டை தயாராக்கிக் கொள்ளவும். மறக்காமல் கண்ணாடி ஜாடியை வெளிச்சம் இல்லாத குளிர்ந்த இடத்தில் வைக்கவும்.

உலர்ந்த அத்திப்பழங்களில் கால்சியம், செம்பு, பொட்டாசியம், மாங்கனீஸ், இரும்பு, துத்தநாகம், செலினியம் போன்ற மினரல்கள் நிறைந்து உள்ளன். பழுத்த அத்திப்பழங்களைக் காட்டிலும் உலர்நத பழங்களில் புரதம், சரக்கரை, மினரல்கள் அதிகமாக உள்ளது.

புரோட்டீன், கால்சியம், பாஸ்பரஸ், பொட்டாசியம் மற்றும் இரும்பு சத்து அதிகம் காணப்படுகின்றன. வைட்டமின் ஏ, வைட்டமின் பி, வைட்டமின் பி 12, வைட்டமின் சி போன்ற சத்துக்களும் அத்திப்பழத்தில் அடங்கியுள்ளன.

உடல் பருமனாக உள்ளவர்கள் எடையை குறைக்க அத்திப்பழம் மிக முக்கிய பங்காற்றுகிறது. நார்ச்சத்து அதிகம் காணப்படுவதால் உண்ணும் உணவு எளிதில் ஜீரணமாகி தேவையற்ற இடங்களில் கொழுப்பு சேருவது தடுக்கப்படுகிறது.

அத்திப்பழம் வாய் துர்நாற்றத்தை நீக்குகிறது. தினசரி 2 பழங்கள் சாப்பிடுவதன் மூலம் உடலில் ரத்த உற்பத்தி அதிகரித்து உடலும் வளர்ச்சி அடையும். கால்சியம் அதிகம் காணப்படுவதால் எலும்புகளை பலப்படுத்துகிறது.

நீரிழிவு நோயாளிகள் அதிகமாக சிறுநீர் கழிப்பதன் மூலம் ஏற்படும் கால்சியம் இழப்பினை ஈடுசெய்கிறது. கல்லீரல் வீக்கத்தை குணப்படுத்தும். தினமும் இரவு நேரத்தில் 5 அத்திப்பழம் சாப்பிட்டால் நாள்பட்ட மலச்சிக்கலை குணமாகும்.

வயதானவர்களுக்கு அத்திப்பழம் அருமருந்தாகும். தொண்டை எரிச்சலை போக்கும். இருமல், ஆஸ்துமாவை கட்டுப்படுத்துகிறது.

செரிமான கோளாறினால் ஏற்படும் வயிற்றுவலியை குணப்படுத்துகிறது. பித்தத்தைத் தணித்துச் சமப்படுத்துவதில் அத்திப்பழம் தனிச்சிறப்பு வாய்ந்தது

பதப்படுத்தப்பட்ட அத்திப்பழம் சீமை அத்திப்பழம் எனப்படும். இது வெண்குஷ்டத்தை குணமாக்கும். அரைகிராம் காட்டு அத்திப்பழத்தை தினசரி ஒருவேளை சாப்பிட்டால் வெண்புள்ளிகள், வெண்குஷ்டம், தோலின் நிறமாற்றம் போன்றவை குணமடையும்.

சீமை அத்திப்பழத்தை தொடர்ந்து 40 நாட்கள் உட்கொண்டு வந்தால் ஒருவருடைய உடல் பலமேறும்.